



மலர் 47 | "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்" | இதழ் - 8

1983 ஆகஸ்ட் ௴ : ருத்ரோற்காரி ௵ ஆடி - ஆவணி ௴

திருச்சிற்றம்பலம்

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற் காட்செய் மின்குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.
(762)

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே. (764)

திருச்சிற்றம்பலம்

— திருமுறை 9, சேந்தனார் திருப்பல்லாண்டு.

## அறிக்கை

5-9-83 திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவிலன்று வழக்கம்போல முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலயத்தில் மாகேசுர பூசை நடைபெறும்.

| பொருள் | திகதி | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 4-9-83 | ஞாயிற்றுக்கிழமை | காலை 8 மணி தொடக்கம் | சிவதொண்டன் நிலயம் |
| ,, | 2-10-83 | ,, | ,, | யாழ்ப்பாணம் |
| ஆசிரம வாழ்வு | 21-8-83 | ஞாயிற்றுக்கிழமை | காலை 9-00 மணி | சிவதொண்டன் நிலயம் |
| ,, | 18-9-83 | ,, | தொடக்கம் | செங்கலடி |
| ஆயிலியம் | 9-8-83 | செவ்வாய்க்கிழமை | நண்பகல் | நல்லூர்த் தேரடி |
| | 5-9-83 | திங்கட்கிழமை | ,, | ,, |
| | 2-10-83 | ஞாயிற்றுக்கிழமை | ,, | ,, |

※ 29-8-83 திங்கட்கிழமை நண்பகல் நல்லூர்த் தேரடியில் அச்சுவினிப் பூசை நடைபெறும்.

## சைவ சித்தாந்த வகுப்புகள்

சனிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரையும் சைவ சித்தாந்த வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. விரும்பிய அங்கத்தவர்கள் பங்குபற்றிப் பயனடைவார்களாக.

## பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| கர்மவினை தீர்த்தருளுவாய் | — | 173 |
| நற்சிந்தனை | — | 174 |
| சிவசிந்தனை | — | 175 |
| அன்பே சிவம் — XII | — | 176 |
| கருமயோகம் | — | 177 |
| நல்ல மலர் | — | 178 |
| நல்லூர்த் திருவிழா | — | 179 |
| சுந்தரர் யோகம் | — | 180 |
| குண்டலினி சக்தி | — | 183 |
| திருத்தொண்டர் வாழ்வும் வாக்கும் | — | 184 |
| நம்பியாரூரன் நாம் தொழுந் தன்மை.... | | 185 |
| சிவயோகசுவாமி பிள்ளைத் தமிழ் | — | 188 |
| கல்வி | — | 188 |
| சும்மா இருக்கச் சூத்திரம் | — | 190 |
| பட்டினத்துப் பிள்ளையார் பாடல் | — | 191 |
| ஞானமார்க்கம் (Editorial) | — | 192 |
| Natchintanai | — | 193 |
| St. Sundaramurthi Nayanar | — | 194 |
| Introduction to Natchinthanai | — | 195 |
| God Alone is | — | 196 |


உ

## 1983 ஆகஸ்ட் மாத புண்ணிய நாள்கள்

| ஆகஸ்ட் | ஆடி | | |
|---|---|---|---|
| 3 | 18 | புதன் | கார்த்திகை விரதம் மூர்த்தி நா. புகழ்ச் சோழ நா. கு. பூசை |
| 6 | 21 | சனி | பிரதோஷ விரதம் கூற்றுவ நா. கு பூ. |
| 8 | 23 | திங்கள் | ஆடி அமாவாசை விரதம் |
| 9 | 24 | செவ்வாய் | ஆயிலியம் |
| 10 | 25 | புதன் | ஆடிப்பூரம் |
| 12 | 27 | வெள்ளி | நாக சதுர்த்தி விரதம் |
| 13 | 28 | சனி | பெருமிழலைக் குறும்பர் நல்லூர்க் க கோ கொடி |
| 14 | 29 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நா கு பூ. சஷ்டி வி சேரமான் பெ நாயனுர் கு பூ. |
| | ஆவணி | | |
| 19 | 3 | வெள்ளி | வரலக்ஷ்மி விரதம் |
| 20 | 4 | சனி | பிரதோஷ விரதம் |
| 22 | 6 | திங்கள் | நடேசரபிஷேகம் |
| 23 | 7 | செவ்வாய் | பூரணை விரதம் |
| 27 | 11 | சனி | சதுர்த்தி சங்கடஹர கணபதி வி. |
| 28 | 12 | ஞாயிறு | அச்சுவினிப் பூசை |
| 29 | 13 | திங்கள் | சஷ்டி விரதம் |
| 30 | 14 | செவ்வாய் | கார்த்திகை விரதம் |

# சிவதொண்டன்

— செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடு —

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்"

மலர் 47 | 1983 ஆகஸ்ட் மீ (ருத்ரோற்காரி ஆடி - ஆவணி மீ) | இதழ் 8

## கர்மவினை தீர்த்தருளுவாய்

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே அம்மாயை இல்லாமையே
    ஆமெனவும் அறிவும்உண் டப்பாலும் அறிகின்ற அறிவினை அறிந்து பார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளல்லாமல் இல்லையெனு நினைவுமுண்டிங்கு
    யானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே இன்பமெனும் அன்புமுண்டு
கண்டன வெலாமல்ல என்றுகண் டனைசெய்து கருவிகர ணங்களோயக்
    கண்மூடி ஒருகணம் இருக்கவென் ருற்பாழ்த்த கர்மங்கள் போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப் பக்கநான் இச்சிப்பனோ
    பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணாநந்தமே. [7]

அண்டபகிரண்டங்களும் மாயா விகாரத்தின் விகாரமேயாகும்; அந்தமாயை யென்னும் பொருளானது, பொய்யேயாகும் என்றும் உணர்ச்சியும் உண்டு; அதற்கு மேலும் உணர்கின்ற உணர்ச்சியை உணர்ந்து பார்க்குமிடத்து, எட்டுத்திசைகளையும் விளங்கச் செய்கின்ற ஒரு கடவுளின் திருவருளையல்லாமல் இல்லைகின்யென்ற நினைப்பும் உண்டு; இப்படியே யான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் இல்லாமல் நீங்கும்படி, துரிய பதத்தில் நிறைந்து நிற்பதே, இன்பம் என்னும் அன்பும் உண்டு; கண்ணால் கண்ட பொருள்கள் யாவும் உண்மைப் பொருள் அல்ல என்று கண்டித்து, கருவிகளும் கரணங்களும் அடங்கும்படி ஒரு கணநேரம் கண் இதழ்களை மூடிக்கொண்டு நிட்டையில் இருப்போம் என்றால், பாழான கர்மங்கள் போராடுகின்றனவே; அவையாவை யெனின் — முன்னமே அமைந்துள்ளனவாகிய கர்மமே கர்த்தா என்கிற பெயரினது பக்கமாக நான் விரும்புவேனோ; பார்க்கின்ற இடங்கள் தோறும் சிறிதும் நீக்கமில்லாமல் நிறைந்து நிற்கின்ற பரிபூரணானந்தமே.

★ ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு ★

# ★ நற்சிந்தனை ★

## நல்லூரான் கிருபை வேண்டும்

இராகம்-சுருட்டி　　　　　　　　　　　　　　தாளம்-ஆதி

**பல்லவி**

நல்லூரான் கிருபை வேண்டும் — நாம் எந்நாளும்
பாடவேண்டும்—வேறென்ன வேண்டும்　　　　(நல்லூ)

**அநுபல்லவி**

சொல்லும் பொருளுமற்றுச்—சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ளவேண்டும்.　　　　(நல்லூ)

**சரணங்கள்**

அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்கவேண்டும்　　　　(நல்லூ)

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும்.　　　　(நல்லூ)

[91]

---

**சன்மார்க்கம்**

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தையிட்டு அதிலுண்டாகும் களையைக் களைந்து, விளையுந் தானியத்தை யொன்று சேர்க்கிறான்.

அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தியென்னும் வித்தை வித்திக் காமக்குரோதமோக மதமாச்சரியமென்னும் களையைக் களைந்து சிவபோக மென்னுந் தானியத்தைச் சேர்த்து வைத்துப்புசிக்கிறான்.

பூலோகமாகிய நந்தன வனத்திலே சீவர்களாகிய மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. சிவன் அதைக் கண்டு மகிழ்கிறான்

பொற்கொல்லன் பொன்னையெடுத்துப் பல பூண்களைப் படைக்கிறான்.

சிவனாகிய பெரிய பொற்கொல்லன் ஆன்மாவாகிய பொன்னையெடுத்துச் சீவர்களாகிய பலபணிகளையும் ஆக்குகிறான்.　　　　[361]

# சிவ சிந்தனை

1. எங்கும் நிறைந்தவன் என்னோ டிருப்பவன்
தங்கும் பேரருள் தானுடை தத்துவன்
திங்கள் சென்னியில் சேர்த்திடும் வித்தகன்
அங்கை அனலேந்தி ஆளுவான் நம்மையும்.

2. சிவசிவ என்றிடச் செய்வினை தீரும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்றிடல் சிவநெறி யாகும்
சிவசிவ என்றிடச் சிவமே யாவர்.

3. ஓம்சிவ ஓம்சிவ ஓம்சிவ ஓம்சிவ
நாம்சிவம் நாம்சிவம் நாம்சிவம் நாம்சிவம்
பாம்பணி யாம்சிவம் பார்முழு தும்சிவம்
தாம்பணி வார்சிவம் தனைநினை வார்சிவம்.

4. இந்த வுலகம் எல்லாம் அவனே
இந்த வுலகம் எங்கும் அவனே
பந்த பாசங்கள் நீக்கிய பக்தர்கள்
சிந்தையிற் கண்டு சிறந்து வாழ்வரே.

5. இன்பம் உறுதற்கு எவைஎவை தேவையோ
அன்பாய் அவையெலாம் அடியேற் களித்தனையே
முன்பின் அறியா மூடனு மெனையீர்த்துன்
பின்வரப் பெரிதும் பேரருள் செய்தவனே.

6. அன்னையினும் சால அன்புடைய அரசே
உன்னைப் போலொருவர் உலகினில் உளரோ
மின்னனைய வாழ்வின் மித்தைதனைக் காண
என்னைவலிந் தாட்கொண்ட ஏந்தலே ஈசா.

7. பொல்லா வினைகள் போயொழி தற்கும்
கல்லா நாயேன் கடைத்தே றற்கும்
எல்லாஞ் சொன்ன எழில்சேர் குருவே
எல்லாந் தந்த என்னார் உயிரே.

8. கூசாமற் பொய்பேசிக் குவலயத் தேயலைந்த
ஆசாட பூதியை அருளறியா வெறுவிலியை
பேசாமற் பேசியும் பித்தனைப்போல் நடித்தும்
ஏசாமல் ஏசியும் இனிதாக வாண்டனையே.

9. சும்மா விருக்கும் சூட்சம் அறியாமல்
இம்மா நிலத்தில் ஏங்கித் திரிந்தேற்கு
கைம்மாறு கருதாது கருணைசெய் தந்தையே
பெம்மா னேயுன்றன் பெருமையா ரறிவார்.

வெண்பா

1. பொன்னொத்த மேனிப் புனிதாவுன் பொற்கழல்கள்
என்னொத்த ஏழைகளும் இந்நிலத்தே — உன்னி
கருவூரும் அல்லற் கவலை தொலைக்கத்
திருவருள் செய்வாய் தினம்.

2. அன்பிலார் போல அடியவரைக் காய்ந்துபெரும்
நன்மை நயந்தருளும் நாதனே — நின்பெருமை
ஆரறிவார் இந்த அவனியிலே ஆன்றவிந்த
சீரடியார் அன்றியே செப்பு.

3. வந்தே வறியேனை வாழ்வித்த வள்ளலே
இந்தூரும் ஈசற் கினியானே — நொந்தார்
குறைகளையும் கோவே குருவே கொழும்புத்
துறையிற் துரையே துணை.

# "அன்பே சிவம்" - XII

### "ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்" பாடல்கள் 56 — 60 பாடல்கட்கு விளக்கம்

56. இளமை மூப்பு முள்ளா னில்லான்
களவிலா நெஞ்சினர் காட்சிக் கெளியன்
மளவிடை யூர்தி மாசிலா மாமணி
அளவு கடந்தவ னவனடி சூடுதும்
ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்.

கடவுளுக்குப் பரம்பொருளாம் நிலையில் இளமைமூப்பில்லை; உலகுயிராய் விளங்கும் நிலையில் இவை உள. சாதாரண மனிதராகிய யாம் அவரைக்கண்டுகொள்ள முடியாது. பெரியோர் தியான சாதனைகளால் நெஞ்சில் நின்றும் காமங் கோபம் லோபம் முதலிய கீழ்மைக் குணங்களைப் போக்கிப் பேரின்பமாகிய கடவுளுணர்ச்சியைப் பெறுவர். அவர்களுடைய தியான பாவனைகளில் கடவுள் இடபவாகனன், பிரகாசம் பொருந்திய மாசிலா மாணிக்கமணி யென்றெல்லாம் தரிசித்தனர். அவன் திருவருளை வழிபட்டு வாழ்ந்து நெஞ்சில் வஞ்சகமொழிந்து கடவுட் காட்சி பெறுவோமாக.

57. அறம்புரி வோர்கள் திறம்பா வாற்றலர்
உறங்கி யுறங்கா திருக்கு முத்தமர்
கறங்குபோல் மனத்தைக் கடந்த சித்தர்
இறந்தும் பிறந்து மிடுக்கணெய் தாதவர்
ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்.

58. சனகர் சனாதனர் ஆதியாம் தவத்தினர்
இனந்தனில் எம்மை இருத்தி வைத்துச்
சினந்தனை நீக்கிச் சிவானந் தமென்னும்
வனந்தனில் வைக்க வள்ளலைப் பாடுவோம்
ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்

[அறம்புரிவோர்கள் ஆற்றலர் உத்தமர் சித்தர் இடுக்கணெய்தாதவர் (ஆகிய சனகர் சனந்தனர் ஆதியாந்தவத்தினர் இனந்தனில் எம்மை இருத்திச்சினந்தனை நீக்கிச்சிவானந்த மெனும் வனந்தனில் வைக்க வள்ளலைப்பாடுவோம். இவ்வாறு இருபாட்டுகளும் ஒருவசன முடிவுடையன.]

யாம் கடவுளைக் கும்பிட்டு எம்மைச் சித்தர் கணத்துள் சேர்க்குமாறு அக்கடவுளை வேண்டிக்கொள்வோம். கடவுள் எங்குமிருக்கிறார் எப்பொழுதுமிருக்கிறார். அதுபோலவே சித்தர் கணமும் எங்குமுளது என்றுமுளது. கடவுளை வழிபட்டு வருபவருக்குச் சித்தர் துணை கிடைக்கிறது சித்தத்துள் நின்று எம் சிந்தையைத் திருத்தி எமக்கு மகிழ்ச்சி தருகின்றனர். எம்மனத்தில் நின்றும் சினம் முதலிய கீழ்மைக் குணங்களைப் போக்கி யாம் தெய்வதத்துவத்தை யடையச் செய்வர். இவ்வகையால் சிவானந்தமென்னும் வனந்தனில் எம்மை இருத்துவர். இப்பேறுகள் எமக்குக் கிடைக்குமாறு கேட்பன வெல்லாவற்றையும் கொடுக்கும் வள்ளலாங் கடவுளைப்பாடுவோமாக.

59. கற்பனை கடந்த வற்புதன் கமலப்
பொற்றுணை மலரடி போற்றி யுலகில்
நிற்பதும் நடப்பது மாய வுயிரெலாம்
சிக்கன வாழ்வுறச் (சிந்தை—செய்) வோமே
ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்.

கடவுள் மனத்துக்கெட்டாத அற்புதப் பொருள். "நாமறியோம்". பெரியோர் அவரைச் சிவபெருமானென வணங்குவர். திருவருளே அவருடைய திருவடிகள். இந்தத் திருவடித்தாமரை மலர்களை யாம் வணங்கித் தியானிப்போமாக. அவர் யாம் கேட்பன வெலாங் கொடுத்தருளும் வள்ளல். உலகில் உள்ள தாவரங்கள் விலங்குகள் மனிதராம் உயிர் வர்க்கத்தினரெல்லாரும் சிக்கன வாழ்வு பொருந்த வேண்டுமென்று தியானித்துவருவோமாக.

சிக்கனவாழ்வு = பொருள்கள் வீண்போகாவாறு முழுப்பிரயோசனமாமாறு வாழ்தல். சிக்கன வாழ்வு காலாகாலமாய்ப் பெரியோரால் பயிற்றப்பட்டு எம்மத்தியில் நிலவி வந்தது. இற்றை நாள் சிக்கன வாழ்வு சிதைவுறுவதைக் காண்கிறோம். ஆடம்பரங்கள் மிகவுமோங்கி வளர்கின்றன. பசி பட்டினி பாரிடைப்பரவுகின்றன. பெருகும் மனிதவினம் பட்டினியால் வாடுவதாகுமென்று பெருக்கத்தைத் தடை செய்யக் கருத்தடையைப் பல நாடுகளும் கைக்கொள்கின்றன. சுவாமிகள் சிக்கன வாழ்க்கையை யாம் தியானிப்பதால் உலகம் வாழவேண்டுமென்று இப்பாட்டை எமக்குத் தந்திருக்கிறார்கள். ஆடம்பர வாழ்க்கை எம்மைச் சமயவழியின் நின்றுந் தூரத்தே கொண்டு செல்கிறது. ஆடம்பர மற்றுச் சிக்கனமாய் வாழ்ந்து கடவுளருளையாம்

பெறவேண்டும். இதை ஒரு நற்சிந்தனை தெளிவாய்க் கூறுகிறது.

> "ஆடம்பரங்களெல்லாம் அடியோடு நீக்கிவிட்டுக்
> கேடறியாத் திருவடியைச்—சின்னத்தங்கம்
> கிட்ட நீ கண்டிடடி."

[சிக்கன வாழ்க்கை பற்றி இரு பெரியோர் வாழ்க்கையிலிருந்து உதாரணங்கள் : மகாத்மா காந்தி படுக்கை விரிப்பிலுள்ள கிளிவை ஊசி நூல் கொண்டுதைத்தார். நவகாளியில் அபாயங்களுக்கூடாகவே பேரனர் தூரத்தே சென்று, உரைஞ்சிக்குளிக்கும் ஓர் கல்லையெடுத்துவரச் செய்தார். பேசிக்கொண்டிருக்கும் போதும் நேரம் முழுப்பயன் படுமாறு நூல் நூற்றுவந்தார். தனது உணவைத் தன் உழைப்பால் சம்பாதியாதவன் பிறரைக் களவாடி உண்கிறானென்றார். எங்கள் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரமவர்களிலும் சிக்கன வாழ்வின் சின்னங்கள் காணப்பட்டன. அவர்களுடன் நெருங்கிப்பழகும் பாக்கியம் அடியேற்கு 1932-க்கும் 35-க்கு இடைப்பட்ட காலத்தில் கிடைத்தது. பெரிய கல்லூரியதிபராய்க் கடமையாற்றிவிட்டுப் பெரிய ஓய்வூதியச் சம்பளம் பெற்று வாழ்ந்த காலம் அக்காலம். தமிழாசிரியர்கட்குப் பயன்படும் பொருட்டு மனோதத்துவ சாத்திர நூலை அக்காலத்திலெழுதிவந்தார்கள். கீழே சீமெந்துத் தரையில் ஒரு பாயிலிருந்து எழுதுவார்கள். எழுதுவதற்கெல்லாம் ஓர் அலகுப்பேனாவை உபயோகித்தார்கள். ஒருநாள் அப்பேனாவின் அலகுகொழுவி கறளால் முறிந்தது. அப்பேனாவை மூன்று வருடங்களின் முன் மூன்று சதம் கொடுத்து வாங்கியதாய்க் கூறினார்கள். அவர்களுடைய உடை உணவு ஓலையால் வேயப்பட்ட குடிசை என்றெல்லாவற்றிலும் சிக்கனம் திகழ்ந்தது. அவர்கள் மாலைக்காலங்களில் சுகாதாரத்தின் பொருட்டு நடக்கும்போது அவர்களது உயர்ந்த உரையாடல்களைக்கேட்டு அவர் பின்னால் நடப்பது எனக்கு வழக்கமாயிருந்தது. அப்போது அடியேனும் ஓர் லண்டன் விஞ்ஞானப்பட்டதாரியாயிருந்தேன்.]

60. காரார் ஆணவக் காட்டைத் திருத்திப்
பாரார் விண்ணோர் பரவும் சிவமெனும்
பேரார் வித்தை யிட்டுப் பேரின்பமாம்
சீரார் தெவிட்டாக் கனியருந் துவமே
ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்.

# கருமயோகம்

## 6. பூரணமாகிய தன்னல மறுப்பே பற்றின்மை

நல்லோ ரளித்த நல்லெண் ணங்கள்
நல்லோன் பாலுற நன்மை வளரும்;
தீயோ ரளித்த தீயவெண் ணங்கள்
தீயோன் பாலுறத் தீமை வளரும். 1.

நன்மையி லுள்ள தீமைப் பான்மையுந்
தீமையி லுள்ள நன்மைப் பான்மையுங்
கண்டு தெளிந்தோன் கரும யோகி;
தன்னல மறுப்பாற் றன்னை மறந்தோன்
இன்னலி னீங்கி யுண்மையி னிலைப்பான். 2.

உய்க பிறரென வுயிரையும் வழங்குந்
தெய்வத் தன்மை சேர்ந்தவர் மேலோர்;
தந்நலம் பேணிப் பிறர்நலம் புரக்கும்
நன்மை யாளர் நடுத்தர மனிதர்;
பிறர்துய ருறுதல் கருதா ராகித்
தந்நலம் பேணுந் தகையர்பை சாசர்;
வேண்டித் தீமை விளைக்குங் கொடியோர்,
கடையரிற் கடையராக் கருதப் படுவார். 3.

நானென தென்னும் நசையின் நீங்கி
நிவர்த்தி வழியி னிற்கு நிலையே
கருமமும் ஞானமும் பத்தியு மொன்று
கூடிய நிலையெனக் குறிக்க வேண்டும். 4.

தலைவன் வீட்டுத் தனையரைப் பேணும்
தாதி போலத் தம்பொரு ளென்ப
இறைபொரு ளாமென இதயத் தெண்ணி
மலையசை வுறினு நிலைகலங் காது
சுகமுனி போன்று துளக்கமற் றிருக்கும்
பூரண மாகிய தன்னல மறுப்பே
பற்றின்மை யாமெனப் பகர்ந்தனர் மேலோர். 5.

— அருட்டிரு விபுலாநந்தஅடிகள்.

---

மனிதனுடைய மனம் பண்படா நிலையில் இருள்நிறைந்த ஆணவக்காடு எனும் படிக்குளது. இக்காட்டில் ஆசை பயம் கோபம் லோபம் முதலிய குணங்கள் விருட்சங்கள் போலுள்ளன. யாம் இக்குணங்களைச் சிவத்தியானத்தாலகற்றுவது ஆணவக்காட்டைத் திருத்துவதாகும். காடு திருத்தி மனத்தில் பொறுமை அருள் வாய்மை தியாகம் முதலிய குணங்களை வளர்க்கிறோம். இது சிவமெனும் பேரார்வித்தையிட்டு சிவத்தை வளர்ப்பதாகும். இவ் வெள்ளாண்மையால் கிடைக்கும் பேரின்பமாம் சிறப்புமிக்கதாய் உண்ண உண்ணத் தெவிட்டாது என்றுமே இனிப்பதாகிய பேரின்பமாம் கனியை அருந்துவோமாக.

# நல்ல மலர்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் — நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி. (1)

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் — ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது. (2)

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்ருள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் — பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம். (3)

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை — சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர். (4)

தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை — நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளிர் நலம். (5)

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர் — நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தரிசித்தாற்
பல்லூழி வாழலாம பார். (6)

பாராயோ வென்னை நீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா — வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு. (7)

சிறப்புக் குறைவிடமே தேவா பெரும!
மறக்குறத்தி வள்ளி மணாளா! — நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ (8)

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும் — நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று. (9)

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் னகவிருளைத் தீர்ப்பதற்குக் — குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான். (10)

# நல்லூர்த் திருவிழா

நல்லூர்க்கொடி யேற்ற மென்றால்
நாலூரும் விழிப்படைந்து
சொல்லாலும் செயலாலும்—கிளியே
தூய்மையாய் வாழ்ந்திடுமே. 1

ஒருபோது உணவருந்தி
ஒழுங்காகக் கோயில் சென்று
தருமங்கள் செய்திடுவார் — கிளியே
சைவமாய் வாழ்ந்திடுவார் 2

கந்தனைக் கண்டிடலாம்
களிகொண்டு நின்றிடலாம்
வந்தனை செய்திடலாம் — கிளியே
தயங்காம லோடிவாடி. 3

காதலிற் சிறந்திடலாம்
கைப்பிடித்து வாழ்ந்திடலாம்
சாதலிற் தவிர்ந்திடலாம்—கிளியே
தயங்காம லோடிவாடி. 4

பேரினைக் கேட்டிடலாம்
பித்தேற்றிக் கொண்டிடலாம்
வேரிக் கடம்பனடி — கிளியே
வேட்கையும் தணிந்திடலாம், 5

சிந்தனை செய்திடலாம்
சிவசிவ என்றிடலாம்
பந்தனை யகற்றிடலாம் — கிளியே
பாங்காக வருவாயோடி. 6

ஆராரி ருந்தென்ன
ஆறுமுகன் தஞ்சமன்றி
வேறார்தான் துணையாவார் — கிளியே
விண்ணாணம் பேசாதேடி. 7

பார்த்தாலே பசிதீரும்
பாலசண் முகன்வடிவை
வேர்த்தாவி மயங்குமுன்னர் — கிளியே
விரைந்துநீ நடந்துவாடி. 8

நீராடி நீறணிந்து
நெற்றியிலே பொட்டுமிட்டு
மாறாட்டக் காரரைப்போல் — கிளியே
மனிதரெல்லாம் போறாரெடி. 9

ஆறுமுக சுவாமிவாசல்
ஆறுதல் அளிக்கும் வாசல்
கூறுமடி யார்களெல்லாம் — கிளியே
கூட்டமாய்க் கூடுகிறார். 10

மணியோசை கேட்டவுடன்
மனத்தினை ஒடுக்கிக்கொண்டு
அணியணி யாகநின்று – கிளியே
ஆராத்தி பார்த்திடுவார். 11

வீதிவலம் வந்திடுவார்
வேலனைக்கொண் டாடிடுவார்
சோதிமய மாக்கிடுவார் — கிளியே
சுற்றுப்பு றங்களெல்லாம். 12

வலமாக வந்திடுவார்
வாயார வாழ்த்திடுவார்
இலமென்று இரந்திடுவார் — கிளியே
எங்கெங்கும் கூட்டமடி 13

அப்பனே முருகாவென்பார்
அழுது தொழுது நிற்பார்
செப்பித் திரிந்திடுவார் — கிளியே
செவ்வேளின் நாமமெல்லாம். 14

காணிக்கை போட்டிடுவார்
கற்பூரம் எரித்திடுவார்
கோணிய பிறைமுடியான் — கிளியே
குமரனைக் கும்பிடுவார், 15

காவடி எடுப்பவரும்
காலடி அழிப்பவரும்
சேவடி துதிப்பவரும் – கிளியே
சேர்ந்தொன்றாய்ச் செல்வரடி. 16

பண்டிதரும் பாமரரும்
பத்தியுடன் பாடியாடி
அண்டர்தொழும் நாயகனை — கிளியே
ஆர்வமுடன் ஏத்துகின்றார். 17

காவடி ஆடுவாரும்
களிகொண்டு பாடுவாரும்
சேவடி ஏத்துவாரும் — கிளியே
தெய்வங்கள் போன்றிடுவார். 18

பால்பழத் துடனேவந்து
பணிந்து அர்ச்சனைகள் செய்து
நால்வகைப் பேறுகளில் — கிளியே
நயந்தவற்றைப் பெறுகிறாரே. 19

தாய் தந்தை மக்கடம்மை
தஞ்சமென் றொப்படைத்து
சேயோன்றன் திருவடியைக் — கிளியே
சேவித்து நிற்பாரடி. 20

# சுந்தரர் யோகம்

முன்னுரை :

சைவ சமயாசாரியர் நால்வரும் தூய சிவ ஞானிகளேயாவர். அவர்கள், ஆன்மகோடிகளை உய்விக்கவேண்டி அவ்வான்மாக்களின் பக்குவத்திற்கேற்பச் சைவசமய நான்கு பாதங்களையும் தனித்தனியே வாழ்ந்து காட்டினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது புறவுலக வாழ்விலும், அகவாழ்விலும் சிவயோக நெறியைக் கடைப்பிடித்து ஒழுகினார்கள். யோகம் என்ற சொல்லுக்கு கூடுதல் என்பது பொருள். சிவயோகமென்பது சிவனோடு கூடுதலாகும். சுந்தரர் சிவனோடு கலந்து வாழ்ந்த வாழ்க்கை நெறியே இங்கே சுந்தரர் யோகம் எனப்பெற்றது. பாசத்தை நீக்கி, இறைவனோடு இயைந்தபொழுதே உண்மையின்பம் உண்டாகும்; இறைவனது இன்பத்தோடு கலந்துள்ள வாழ்வே உண்மை வாழ்வு. "இறைகளோடு இயைந்த இன்பம்; இன்பத்தோடு இயைந்த வாழ்வு" என்பது சுந்தரர் திருவாக்கு. இத்தகைய சிவயோக வாழ்வினை யோகநூல் வல்லாரே நன்குணர்வர். எனினும் எமது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் சித்தாந்த நெறிக்கு மாறுபாடின்றிச் சிந்திப்பதும் ஞானபூசையின் பாற்படும். தேசம் உய்ய, உலகுய்யத் திருத்தொண்டத் தொகை தந்த திருவாளன் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சைவமுதல் திருத்தொண்டராகிய அவர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான், சைவசித்தாந்த தத்துவஞானப்படிமுறையில் திருத்தொண்டர் புராணமாகப் பாடித்தந்துள்ளார். அப்புராணம் சைவசித்தாந்த தத்துவ ஞானக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

---

ஈராறு கையோனை
    எழிலாரும் சேயோனை
ஆராத காதலுடன் — கிளியே
    அடியார்கள் அழைத்திடுவார். 21

காலையிலும் மாலையிலும்
    கைகூப்பி வணக்கஞ் செய்து
மூலைக்கு மூலை நின்று — கிளியே
    முருகனருள் வேண்டிடுவார். 22

எல்லோரும் சேர்ந்தொன்றாய்
    எழுப்புகின்ற ஏத்தொலிபோய்
எல்லாரும் வானத்திலே — கிளியே
    எழுகடல்போல் இசைத்திடுமே. 23

அரோகரா வென்றடியார்
    அழைக்கின்ற ஓசைசென்று
பராபரன் செவிகளிலே — கிளியே
    பணிவாகக் கேட்டிடுமே. 24

நல்லைநகர் வாசஞ் செய்வோன்
    நற்றவத்தோர் தங்கள் நேசன்
தொல்லையெல்லாம் போக்கிடுவான் — கிளியே
    தூய்மையுடன் தொழுதிடுவாய் 25

எல்லையில்லா அருளுடையான்
    எல்லார்க்கு மெளியானவன்
வல்லசுரர் வலியையெல்லாம் — கிளியே
    வாட்டியருள் செய்திடுவான் 26

விரதங்கள் பிடிப்பவரும்
    வேதங்கள் படிப்பவரும்
சிரவணஞ் செய்பவரும் — கிளியே
    திரண்டொன்றாய்க் கூடிடுவார். 27

பாரெல்லாம் கூடி நின்று
    பத்தியுடன் பரவிடுவார்
தேர்விழாக் கண்டிடுவார் — கிளியே
    திருவருளும் பெற்றிடுவார். 28

நல்லூரிற் றேரிலன்று
    நானில மக்களெல்லாம்
நல்லாக நோற்றிருந்து — கிளியே
    நல்லவரம் பெற்றிடுவார். 29

ஆராலும் அளந்தறியா
    ஆறுமுகன் அருளையெல்லாம்
சீராகச் செப்பவென்றால் — கிளியே
    சிறியேற்கு மாகுமோடி 30

ஒளிவீசும் வேலதனை
    ஒண்டொடியே உள்ளே கண்டால்
வெளியிலுள்ள வீணரெல்லாம் — கிளியே
    விட்டோடி மறைந்திடுவார். 31

ஈழநாடு வாழவந்த
    எங்கள் குருநாதன்
நீள நினைக்க வைத்தான் — கிளியே
    நிகரில்லா நல்லூரானை. 32

முற்றும்.

## புற உலக வாழ்வு :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் உலக வாழ்வின் மூலம் நிலையற்ற பொய்ப்பொருளை அனுபவித்து நீக்கிவிட்டு, நிலையான மெய்ப்பொருளைச் சார்ந்து வாழ்வதற்கு வழிகாட்டியுள்ளார். உயிர், தன்னோடு அநாதியே செயற்கைச் சம்பந்தமாகக் கூடியுள்ள ஆணவமல சக்தியை நீக்கி, அநாதி இயற்கைச் சம்பந்தமுள்ள சிவத்தைச் சார்தலே பிறவிப்பயனாகும். சுந்தரர் எங்கும் வியாபித்துள்ள சிவபரம்பொருளைச் சார்ந்து, அதில் வியாப்பியமாய் ஒன்றி அடங்கி நின்றவர். அவர் சத்தான சிவத்தைச் சார்ந்து, தன்னை முற்றாகச் சிவனிடம் ஒப்படைத்து, தற்போதமற்று சிவபோதமுற்று நின்றவராதலின், காண்பன எல்லாவற்றிலும் சிவத்தையே கண்டார். 'யாவையுஞ் சூனியம் சத்தெதிர்' ஆகையால், சிவமாந்தன்மையுற்ற சுந்தரர்முன் மாயாகாரியமான உலகப் பொருள்கள் ஒன்றுமே பிரகாசமாக விளங்கித் தோன்றவில்லை. மனமாசு அகன்று, சத்தால் வினையின் நீங்கி அறிவு விளங்கிய சுந்தரர்க்கு ஞானமே காண்பதற்குத் துணைக் கருவி ( வியஞ்சகம் ) ஆயிற்று. ஞானக்கண் கொண்டு பார்த்தமையால் அவருக்கு யாவுஞ் சிவமாகவே தோற்றமளித்தன. பரவையாரைக் கண்டபோதுங்கூட அது, 'சிவனருளோ' என்றே அதிசயித்தார். இவ்வாறு வன்றொண்டர் திருவருளையே தமது வாழ்வாகவும் வைப்பாகவும் கருதினார். பெண்ணிடத்திலும் பெரும்போகத்தையே துய்த்தார்.

'' சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள்
தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன்
அருளதே ''

என்ற சுந்தரர் செந்தமிழ், அவருக்குச் சிற்றின்பமும் பேரின்ப அனுபவமாயிற்று என்பதைத் தெளிவாக்குகின்றது. சிவத்தோடு கலந்து, பிரிப்பின்றி நின்ற சுந்தரருடைய வினைப்போகங்களைச் சிவபெருமானே ஏன்று கொண்டார். சிவமயமாய் நின்ற சுந்தரர்க்கு அவ்வினைப் போகங்கள் சிவானந்தப் பெரும் போகமாக விளைந்தன. திருவுந்தியார் என்ற சைவசித்தாந்த சாத்திரமும், 'திருவருளில் ஆழ்ந்து தம்மையும் இழந்த பக்குவான்மாவுக்குப் பெற்ற சிற்றின்பமே பேரின்ப அனுபவமாகும். பிறவியறும்' என்று கூறுகின்றது.

'' பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
மூளாது மாயையென் றுந்தீபற ''

என்பது அவ்வுந்தியார்.

சுந்தரர் நமச்சிவாயத் திருப்பதிகத்தில், தனக்கு வேறு துணையின்றித் திருவடியையே துணையென மனத்தில் துணிந்ததாகவும், அவ்வாறு துணியப் பெற்றபின்பே தான் மனிதனாகப் பிறந்ததாகவும், பிறவாததன்மை தன்னை வந்தடையப் பெற்றதாகவுங் கூறியுள்ளார்.

'மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத
தன்மைவந் தெய்தினேன் ''

என்பதே அத்தேவாரப் பகுதியாகும். சிவனடிசார்ந்த சுந்தரர், வாழ்க்கைத் தேவைகள் அத்தனையையுஞ் சிவபெருமான் ஒருவரிடத்திலேயே வேண்டிப் பெற்றுக்கொண்டார். ஒன்றுக்கு இரண்டு வாழ்க்கைத் துணைகளைக்கூட சிவனிடமே வேண்டிப் பெற்றார். உண்ணுஞ் சோறும், பருகும் நீரும், உடுக்கும் கூறையும், பொன்னும், மணியும், போகசாதனமும், பிறவும் சுந்தரர் கேட்ட நேரமெல்லாம் இல்லையென்னாது எம்பெருமான் ஈந்தருளினார். பரவைக்கு இரவில் திருத்தூதும் சென்றார். திருக்கழிப்பாலைத் திருப்பதிகத்தில் சுந்தரர்,

'' எங்கேனும் மிருந்துன் னடியேன் உனை நினைந்
தால்
அங்கேவந் தென்னோடும் உடனாகி நின்றருளி
இங்கேயென் வினையை அறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே ''

7-23-2 ) என எடுத்தோதித் துதித்தல் காண்க.

## அகவாழ்வு :

உயிர்க்குயிராய் இருந்த உபாசனாமூர்த்தியே உயிரின் பக்குவநிலைகண்டு, குருவடிவாக வெளிவந்து தீட்சித்து ஞானோபதேசம் செய்தருளும் என்பர் பெரியோர். அவ்வாறே சுந்தரர்க்கு இறைவனே, ஞானதேசிகராக எழுந்தருளிவந்து நல்லருள் புரிந்தார். மணப்பந்தருள் வந்தருளிய விருத்தவேதியரே ஞானதேசிகர். அவர் பேசியனவே, குருமொழி

வைத்ததாகும். திருவெண்ணெய் நல்லூரில் விடைமேல் எழுந்தருளி முன்னுணர்வு நல்கியது ஞானமருளியதாகும். அவரே திருவதிகையில் சுந்தரர்க்குத் திருவடி தீட்சையுஞ் செய்தருளினார். சென்றடையாத திருநிறைந்த சிவஞான பூமியே திருவாரூர். அங்கே சிவனடி சார்ந்த சிவஞானியரே கூடுவர். அவர்களுக்கு அடியனாகும் தன்மையைச் சுந்தரர்க்கு அருள்செய்யத் திருவுளங் கொண்டார் தேசிகர். 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்துத், 'தென்தமிழ்ப் பயனாந் திருத்தொண்டத்தொகை'யைப் பாடுவித்தார். சுந்தரரும் திருக்காளத்தியினில்,

> " மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
> குறியே! என்னுடைய குருவே! உன்குற்றேவல்
> செய்வேன் "

அடியேனுக்கு அருள்புரிதல் வேண்டும் என வேண்டிக் கொண்டார். அவ்வாறு விண்ணப்பித்தவர் திருத்துறையூரில், 'தலைவா! உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே' என்று துறவறத்தின் தலையொழுக்கத்தை விரும்பி வேண்டுதல் செய்தார்; அடியேன், எனது மனை வாழ்க்கையை மனத்தாலும் வெறுத்தேன்; உடம்பாலுந் துறந்து விட்டேன்; என் விண்ணப்பத்தை ஏற்றருளுக என்ற கருத்தில், "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன் விளங்குங் குழைக்காதுடை வேதியனே" என்று இரந்தார். மணவாழ்வு சலித்த பின்னர், 'அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்; உலகியலார் பிழுக்கை வாரியும் பால்கொள்வர்; தேவரீரும் என்னை ஏற்றருள்க' எனக் கெஞ்சிக் கேட்டார். இவ்வாறு சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்டவற்றிலிருந்து அவர் இல்லற ஞானியாகவே இருந்தார் என்பது வெளிப்படுகின்றது. சைவ சித்தாந்த சாத்திர மரபின்படி சுந்தரர் யோக வாழ்வினை நான்கு வகையாகப் பகுத்துணர்தல் வேண்டும்.

### சரியையில் யோகம் :

யோகப் பகுப்பில் முதலாவது சரியையில் யோகம், பாதகந்தீர்ந்து, பாவங்கள் ஒழிந்து, மலந்தீர் சாதனம் மறவாது கடைப்பிடித்து ஒழுகுதல் முதலான இயம நியமங்களை அனுசரித்தல் இதில் அடங்கும். பிரணவ மந்திர செபம் பிரணவ யோகம் என்பவற்றால் பாச தகனஞ் செய்தல் சரியையில் யோகமாகும்.

> " சூற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்
> சூழ்ந்த களவெலாம்
> செற்றொருவரைச் செய்த தீமைகள் இம்மை
> யேவருந் திண்ணமே "

(7-35-4) பாதகந்தீர்த்தலாகிய இவை, சங்கார யோகத்தின் பாற்படும். "பாவம் வினையறுப் பார் பயில் பாலாவி—" என்றது சந்திரயோகம்.

> " கலையமைத்த காமச் செற்றக் குரோத லோப
> மதவருடை
> உலையமைத்திங் கொன்ற மாட்டேன்
> ஓணகாந்தன் தளியுளீரே "

(7-5-8) இவை அறிவை மறைக்கும் "மந்தேகாள்" என்னும் அசுரகுணங்களை அகற்றுதலாகிய இயமம். திருக்குருகாவூர் செல்லும் வழியில் அமுதளித்த பரம்பொருள் பந்தரோடு மறைந்த செய்தியைத், தூங்காமல் தூங்குதலாகிய பிரணவயோக சித்தியால் அறிந்தார் சுந்தரர். திருக்குருகாவூர் வெள்ளடைப்பதிகம் இதற்குச் சான்றாகும். பரவெளியே சொரூபமான நீ (கருணை மிகுதியால்) இம்மண்ணுலகில் வாழும் அடியவர்களின் மனத்தில் யாதொரு துன்பமும் தோன்றாதவாறு தடுத்தத் திருமேனிதாங்கித் திருக்குருகாவூரில் வெளிப்பட நின்றருளுகின்றாய்; மிக்க இருளிடத்து விளக்கைப் போன்று, (உன்னைக்) காணுந்தன்மையற்ற எனக்கு உன்னைக் காட்டி நின்றாய்; கண்ணிலுள்ள கண்மணிபோன்று, என்னுடனிருந்து என்னைக் காணவுஞ் செய்து நிற்கின்றாய்; பண்ணிடை இனிமைபோன்று, உள்ளுணர்விலும்; பழத்தினிற் சுவை போன்று புறவுணர்விலும் இன்ப அனுபவம் தருகின்றாய் என்ற கருத்தில்,

> " பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற்
> சுவையொப்பாய்
> கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட்
> சுடரொப்பாய்
> மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
> விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே "

(7-29-6) என்ற தேவாரத்தைப் பாடியுள்ளமை காண்க. (தொடரும்)

# குண்டலினி சக்தி

(131ஆம் பக்கத் தொடர்ச்சி)

— பரமாத்மா —

சீவவர்க்கமெல்லாம் மனிதராயிருந்தாலும், தேவர்களாயிருந்தாலும், விலங்குகளாயிருந்தாலும் பிராணன் உள்ளவரையுமே இயங்கும். அதுவே அனைத்திற்கும் சீவபரியந்தம் உள்ளதாம். உயிர் என்ன என்பதைப் பற்றி இந்தியாவிலும் பிற இடங்களிலும் விவாதம் நடைபெற்றது. வெப்பத்தினால் அண்டத்திலிருந்துதானே உயிர் உற்பவிப்பது போலவும், மஸ்தில்லாத அரிசியிலும் கருப்பச் சக்கையிலுமிருந்து லாகிரி வஸ்துக்கள் உண்டாவது போலவும் உடம்பிலுள்ள இரசாயனப் பொருட்களின் தாதுக் கூட்டுறவால் உயிர் உண்டாகுமென லோகாயதர் கொள்வர். சாங்கிய நூலார் இதை மறுப்பர். பிராணனும் அதன் ஐவகை இயக்கமும் வாயு என்றழைக்கப்படும். சாங்கிய மதசித்தாந்தப் படி சீவ இயக்கத்தை அழிக்கும் சடசக்தி உயிராகாது. அவ்வித வாயுவின் இயக்கத்தால் எழும் சடஅசைவும் உயிராகாது. இம்மதக் கொள்கைப்படி பிராணன் மனத்தினதும் ஐம்பொறிகளினதும் சாமானிய தருமமென்றும், அதனாலேயே தேகம் தொழிற்படுவதென்றும் கூறப்படுகின்றது. ஒரு கூட்டில் அடைக்கப்பட்ட பல பறவைகள் தாங்களே அசைவதால் கூட்டையும் அசையச் செய்வதுபோல-மனமும் பொறிகளும் தத்தம் அசைவால் தேகத்தையும் அசையும்படி செய்கின்றன. ஆகவே, உயிர் தாம் பெற்றுள்ள தேகத்தில் அமைந்திருக்கும் பல்வேறு வகைப்பட்ட அசைவுத் தொகுதியாம்.

வேதாந்திகள் பிராணன் வாயுவுமன்று, அதன் இயக்கமுமன்று என்பதை ஒப்புக்கொள்வர். எனினும் அதுசட அசைவின் சேர்க்கையாலானது என்பதை மறுப்பர். அகண்டசித்துப் பொருள் தாங்கிய சடவடிவமே பிராணன் எனவும் அதுவோர் தனிப் பொருளெனவுங் கொள்வர். ஆதலால், தேகம் முழுவதும் வியாபித்திருக்கும் சூக்கும சக்தியே உயிராம். அது தடித்த வாயுவன்று. எனினும் அறியப்படும் பொருளெல்லாம் சடமாதலால், உயிரும் அறிவில்லாததுபோற் தோன்றும் நுண்ணிய சக்தியென்க. தூலதேகம் (அன்னமய கோசம்) தம்முள் வித்தியாசமுள்ள உறுப்புக்களாலாக்கப் பெற்றது. ஆனால், தூல தேகத்தில் வதியும் பிராணமய கோசமோ, சாமானிய வடிவாயும், தூலதேகம் முழுவதும் வியாபித்தும் நிற்கும். அது பிண்ட சரீரம்போல, பல பேதங்களையுடைய உறுப்புக்களாகப் பிரிக்கப் பெறாது. தூல தேகத்தின் ஒவ்வொரு உறுப்பினாலாகும் வேறுபட்ட தொழில்கள் இருப்பனபோல சூக்கும தேகத்திற்கில்லை. அது தனக்கு ஆதாரமாகக் கொண்ட தனு முழுவதினும் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து நிற்கும் சாதாரண தன்மையுடையது.

தேகம் முழுவதும் செறிந்திருக்கும் வாயு (பிராணன்) நித்திய தெய்வீக ஜீவசக்தியின் (தானாகவே தோன்றியுள்ள சூக்குமமான–காட்சிக்கரிய-சர்வ வியாபகமான) அவதாரம். அண்டம் முழுவதும் பரந்து செறிவதால் அதற்கு வாயு என்றாயிற்று. வா-அசைதல்; அது கூட்டி உணரப்படாதது; அதன் விருத்திகளே யறியப்படுவன. சகல சரப்பொருள்களினதும் தோற்றம், திதி, ஒடுக்கங்கள் இப்பிராணனாலேயே (வாயு) அமையப் பெறுதலால் சகல ஜீவவர்க்கங்களும் அதைப் போற்றுகின்றன. உயிரை இயக்கும் வாயுவாகப் பிராணன் தேகபரியந்தம் வியாபித்து நரம்பினூடே நின்று தொழில்களை இயக்கும். சாதாரணமாக, அது தேகத்தின் தாதுக்களை ஒரு சமரச நிலையில் நிறுவிக்கொள்ளும். தேகசம்பந்தமுள்ள வாயு அதனதன் ஸ்தானத்திற்கும் தொழிலுக்கு மேற்ப வாத பித்தமென்னும் பாகுபாடுகளைப்போல ஐவகையாகப் பிரியும். சர்வ வியாபகமாய் இருக்கும் வாயு தேகத்தோடு சம்பந்தப்பட்டுச் சரப்பொருள்களை இயக்கும் அவசரத்தில் பிராணன் எனப்பட்டுப் பத்து விருத்திகளை அடைகின்றது. அவற்றுள் ஐந்தே முக்கியமானவை. அவை யாவன:- 1 சுவாசித்தல் (பிராணன்) பூவுலகில் இப் பிராணன் சரப்பொருளின் நாசியில் பூரகமாய் (ஸ) சக்தி யென்றும் இரேசகமா (ஹ) சிவமென்றும் நிலவும். சுவாசித்தலே ஒரு மந்திரமாம். தானாகவே பிறத்தலால் அது அஸபா மந்திரம் அல்லது அஸபை எனப்படும். ❊

# திருத்தொண்டர் வாழ்வும் வாக்கும்

## 4. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

சோழ நாட்டிலே, திருப்பெருமங்கலத்திலே, பரம்பரைச் சேனாதிபதித்தொழிலில் மேம்பட்ட ஏயர்குடியிலே கலிக்காமர் என்றொருவர் இருந்தார். அவர் குரு, லிங்க, சங்கம பத்தியிலே சிறந்து, திருப்புன்கூர் சிவாலோகத் தியாகேசர் ஆலயத்திலே பெரும் திருப்பணிகள் செய்து "கிறியாமாவன நீறுகந்தார் கழல்" என்று தொழுது இன்புறுவார்.

அவர் "நம்பியாரூரர் நெஞ்சில் நடுக்கம் ஒன்றின்றி தம்பிரானாரைத் தையல்பால் தூது விட்டார்" என்ற செய்தியை ஏயர்கோனார் கேட்டு வெம்பினார்; அதிசயித்தார்; வெருவினார். பின் "நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று! இதனைச் செய்வான் தொண்டனாம். இப்பிழையினைக் கேட்டபின்னும் நான் இறந்திலேன்" என்று விளம்பி, ஒருவன் பெண்ணின் பாற் கொண்ட காதலால் ஏவ, ஒப்பில்லாத கடவுள் தம் பாத தாமரைகள் நோவ பாரிடை செல்வதும் வருவதுமாகித் தூதராய் உழன்றாராம். எம்பிரான் இசைந்தால் அவரை ஏவுதலுமாமோ? இதனுக்கு மனம் நடுங்காத அவனை நான் காணும் நாள் எந்நாளோ?

"அரிவைகா ரணத்தாலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக ஏவி அங் கிருந்தான் தன்னை
வரவெதிர் காண்பே னாகில் வருவதென் னாங்கொல்"

என்று சொல்லிச் செற்றங்கொண்டிருந்தார்.

ஏயர்கோனார் எண்ணியவற்றையறிந்த சுந்தரமூர்த்திநாயனார் தம்பிழை உடன்படுவாராகி சிவபெருமானுக்கு அதனை விண்ணப்பஞ் செய்தார். அவர் இருவரையும் ஒன்று கூட்டி வைத்தற்கு ஏயர்குரிசிலார் தம்பால் சூலை நோயை அருளினார். அந்நோய் அனல்போற் குடைய வேதனை மிக்கு வருந்தி, வீழ்ந்து பரமசிவனுடைய திருவடிகளைப் போற்றினார். அப்பொழுது, ஈசர் "உனை வருத்தும் சூலை வன்றொண்டன் தீர்க்கிலன்றி முந்துற ஒழியாது" என்றருளிச் செய்ய, அவர் "இச்சூலை அவனாலே தீர்க்கில் தீராதொழிந்தெனை வருத்தல் நன்று; உற்ற வன்றொண்டர்க்கு ஆம் உறுதியே செய்தீர்" என்றார். உடனே பரமசிவன் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் சென்று "கலிக்காமனை வருத்துகின்ற சூலையைத் தீர்ப்பாய்" என, அவரும் ஏயர்கோனிடம் செல்லப் புறப்பட்டுத், தம்வரவை முன்னரே அவருக்கு அறிவித்தார். "எம்பெருமானைத் தூதனுப்பியவன் சூலைநோயைத் தீர்ப்பதா? அவன் வருமுன்னே இச்சூலையை வயிற்றினோடு கிழிப்பேன்" என்று வாளினாலே தம் வயிற்றைக் கிழித்து இறந்தார். அவர்தம் மனைவியாரும் உடன் இறக்கத் துணிந்தாராயினும் நம்பியாரூரர் வருகை கூறக்கேட்டு அது ஒழிந்து, சுற்றத்தாரை ஏவ, அவர்கள் சுந்தரரை எதிர்கொண்டு வணங்கினார்கள்.

வீட்டினுள்ளே புகுந்த நம்பியாரூரர் தமக்களிக்கப்பட்ட அருச்சனைகளை ஏற்று கலிக்காமரைக் காணவிரும்பினார். சுற்றத்தார் இரத்தம் சோர குடர்சொரிந்து இறந்து கிடந்த கலிக்காமரைக் காட்டக் கண்ட சுந்தரர், "புகுந்தவாறு நன்று; நானும் இவர்போல் இறந்துபோவேன்" என்று சொல்லி உடைவாளை எடுத்தார். உடனே உயிர்பெற்றெழுந்த கலிக்காமர் அவர் கையைப் பிடிக்க அவர் விழுந்து வணங்கினார். கலிக்காம நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கினார்.

இருவரும் அதிக நட்புள்ளவர்களாகித் திருப்புன்கூருக்குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்யும்போது வன்றொண்டர் "அந்தணாளன்" என்றெடுத்துத் தேவாரப் பதிகம் பாடினார். சிலநாட் கழிந்த பின்பு திருமுனைப்பாடி நாடரும் ஏயர்குல முதல் தலைவனாரும் திருவாரூரில் அன்பால் மகிழ்ந்துடனுறைந்தனர். அங்கு இனிதமர்ந்து மீண்டும் தத்தம் பதிகள் சேர்ந்தனர். ஏயர்கோன் கலிக்காம நாயனார் தமக்கேற்ற தொண்டுகள் செய்து சிவபெருமான் பாதம் சேர்ந்தனர். [29] [ஆனி – இரேவதி]

# "நம்பியாரூரன் நாம் தொழுந் தன்மையன்"

நம்பி என்பது, ஆதி சைவருக்குரிய சிறப்புப் பெயர். பெரியோரிட்ட பிள்ளைத் திருநாமம் ஆரூரன் என்பதாம். இவ்விரு நாமங்களுஞ் சேர்ந்தே நம்பியாரூரன் என்ற திருநாமம் உதித்தது. ஆதிசிவப்பிராமண குலத்தில் அவதரித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நம்பியாரூரன் என்ற நாமத்தோடு திருநாவலூரார், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், வன்றொண்டர் போன்ற பல காரணப் பெயர்களும் உண்டு. திருக்கயிலாயத்தில் திருநீற்றுத்தொண்டும், மலர்த்தொண்டுஞ் செய்தகாலையில் ஆலாலசுந்தரர் என அழைக்கப் பெற்றார்.

இறைவனோடு இயைந்த இன்பவாழ்வை நம்பியாரூரர் நானிலத்தில் வாழ்ந்து காட்டினார். இறைவனோடு கூடிவாழுஞ் சிவயோக வாழ்வுக்கு இவர்வாழ்வு எடுத்துக்காட்டு. இல்லறத்தையுந் துறவறத்தையும் இறைவனோடு இணைத்து வாழ்ந்தார்; "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா" எனப் பாராட்டினார் சிவப்பிரகாசர். உலகியல், அருளியல் என ஓதப்பெறும் இரு திறத்தும் அனுபவமுற்று, அயரா அன்பின் அரன்கழல் சேர்ந்த உள்ளத்தினர் ஆரூரர்; அருட்செல்வராய்த் தமிழால் இறைவனைப் பிணித்தவர் தம்பிரான் தோழர். நாவலூரில் பிறந்து, நாவலர் பலர்க்குத் தலைமை பூண்ட நாவலர் காவலர் இவர். மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்து, மன்பதைகள் பிறவிப்பேற்றைப் பெற்றுய்ய வழிகாட்டியுள்ளார்.

தாழ்வெனுந் தன்மையோடு ஆண்டவனுக்கு மாத்திரமன்றி அவனடியார்க்கும் அடிமையானவர்.

"நாவின்மிசை யரையனொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் (கு) அடியான் அடித்
தொண்டன்"

எனப்பாடிய பழுத்த பணிவுப் பெருமை மிக்கவர் நம்பியாரூர். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தம்மையாண்ட சிவபெருமானுக்கு அடிமையாயினர்; நம்பியாரூரரோ அடியார்க்கும் அடிமையானார். இதனால் இறைவனும் தனக்கு அடிமைபூண்டவரிலும் பார்க்க, தன்னடியார்க்கு அடிமைப்பட்ட ஆரூரரிடம் மிகவும் எளியவராக விளங்கினார். திருமால் பிரமன் இந்திரன் தடைபட்டுச் சமயம் பார்த்துச் செல்லும் சிவசந்நிதி, தம்பிரான் தோழனுக்குத் தங்குதடையின்றிச் செல்லுமிடமாயிற்று. நம்பியாரூரரின் பழுத்த பக்திக்கனி ரசம்,

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்";
"திருவும் மெய்ப்பொருளும் செல்வமும்
எனக்குன் சீருடைக்கழல்கள்";
"பிழைப்பன் ஆகிலும் திருவடிப்பிழையேன்;
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்றுநா னறியேன் மறுமாற்றம்";
"நான்மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே"

எனப்பலவாறாகப் பிரவாகிக்கின்றது.

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

என்பதனால் எக்காலத்திலும், எத்தேசத்திலும், எச்சமயத்திலுமிருந்து அவரவர்க்கு ஏற்றபடி அருள்புரிபவர் சிவபெருமானே என்பது தேற்றம். இதை உட்கொண்டே சுந்தரர் "அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து அவ்வவர்க்கு அங்கே ஆரருள்புரிந்து" என்று பாடியருளினார். அதன்மேலும், "அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்" எனத் தமிழ் நாட்டின் எல்லைக்கு அப்பாலும் எங்கெல்லாம் அடியவர்களுண்டோ அவர்களனைவரையும் அடியார்களாகக் கொண்டு பணியும் நம்பியாரூரர், உண்மையில் விரிந்த உள்ளம் படைத்த பெருந்தகையே. சைவசமயத்தின் உயர்வற உயர்ந்த உலக நெறிக் கோட்பாட்டைப் பாரோர்க்கு எடுத்து விளக்கிய பரமாசாரியர் இவர்.

சிவபெருமான் தானும், அடியார்க்கும் அடியவன் என்பது தொனிக்க (உடம்பொடு புணர்த்தி) "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என அடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டத் தொகை பாட அருள் புரிந்தார். நம்பியாரூரர் சிவனருளால்

நாடிடையிட்டுங் காடிடையிட்டும் நடந்த செய்திகளை யுணர்ந்து மிகச் சுருங்கிய அடைமொழி புணர்த்துத் திருத்தொண்டர்த் தொகையைப் பாடியருளினர். இதன் சிறப்பினை யுணர்ந்த சேக்கிழார் பெருமான், 'தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத் தொகை' எனப் பாராட்டினர். சிவதொண்டர் சீர் தொகுத்த சுந்தரரைத், தொண்டர் சீர் பரவுவார் உச்சி மேற் கொண்டு துதித்தார்.

"தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை
முன்பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை
வணங்குவாம்"

என்று தொழுதார். 'சைவமுதல் திருத்தொண்டர்' எனப் போற்றித், தாம்பாடிய புராணத்திற்கும் திருத்தொண்டர் புராணம் என, அவர்பெயரையே சூட்டி மகிழ்ந்தார். திருநாவலூரர் பாடிய திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதியாக முளைத்துத், திருத்தொண்டர் புராணமாக விளைந்தது. பெரியபுராணத்தின் முதல் நடு இறுதி மூவிடத்திலும் நம்பியாரூரர் வரலாற்றை நயம்பெற உரைத்து, ஏனைய சருக்கங்களின் இறுதி தோறும் சுந்தரருக்குத் துதிகூறு முகத்தால் தொடர்புறுத்தியுள்ளார். திருத்தொண்டர் புராணம் என்னும் பக்திச் சுவை கனிசொட்டும் ஞான அமுதினை அருந்தித் திளைக்கும் அரும்பேறு நம்பியாரூரர் மூலமன்றோ நமக்கு வாய்த்தது.!

சிவபெருமானது சிறப்பியல்பை நாமறிந்துய்யுமாறு நம்பியாரூரர், "இன்ன தன்மையன் என்றறியொண்ணா எம்மான்" எனவும், "மனத்தாலும் நினைப்பரியான்" எனவும் பாடியுள்ளார். உயிர்களை உய்யக் கொள்ளுங் கைம்மாறு அற்ற கருணையால் அவரே போகியாயிருந்து உயிர்களுக்குப் போகம் புரியுந் தடத்தத் திருமேனி கொண்டு திருவாரூர் முதலிய திருப்பதிகளில் வெளிப்பட வீற்றிருந்தருளுதலையும் ஆரூரர் அறிவுறுத்தினர். 'வைத்தனன் தனக்கே தலையும் என்நாவும்' எனப்பாடித் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தன்னை உடைய தம் முதல்வனிடம் முற்றாக ஒப்படைத்து மீளா அடிமையானார் ஆரூரர். தன் செயலற்றுத், தன்னையும் முற்றாக இழந்து, திருவடியே புகலெனச் சரணடைந்தார். ஆரூரருடைய அன்புப் பிணிப்பில் ஆண்டவன் கட்டுண்டார். அவருடைய உலகியல் வினைப்போக விளைவுகள் அனைத்தையும் எம்பெருமானே எடுத்துச் சுமந்தார்.

திருநாவலூரருக்குப் போகம் புணர்க்க வேண்டி முத்தித் தலமான தில்லையினின்றும், போகத் தலமான திருவாரூருக்கு அவரைப் போகுமாறு பணித்தார் திருவாரூர் மக்களைக் கொண்டே அவரை வரவேற்பித்து, பரவையாரையுந் திருமணஞ் செய்விப்பித்துத், தன்னையுந் தோழனாகக் கொடுத்துத் தம்பிரான் தோழராக்கினர். "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்" என்று இருந்துதி செய்தார் சுந்தரர். நம்பியாரூரரது நல்வாழ்வுக்கு ஆவனவற்றை எல்லாம் ஆண்டவனே அளித்து வந்தார்: சோறுங் கூறையுஞ் சுமையாளுங் கொடுத்தார்; போகமுந் திருவும் புணர்த்தார். சிந்தையிற் சிவதொண்டனை சுந்தரர், தொண்டர் குடிவாழ்க்கையைத் துலக்கினர். தொண்டே தொழுகையாகக் கொண்டு சிவதொண்டில் ஈடுபட்ட திருநாவலூரருக்குத் திருவாரூர்த் தெய்வம், மடிதற்று முன்நின்று பணிபுரிந்தது. பசி, தாகம், பகல்வெயில் பாராது பாதயாத்திரையாய்க் குருகாவூர் செல்லும் பாதையில் பொதிசோறுந் தண்ணீரும் பூம்பந்தருமாய் நின்று சுந்தரரது வழிநடை வருத்தம் மாற்றினர். திருக்கச்சூரில் இல்லங்கள் தோறும் இரந்து வந்து இனிய அமுதளித்தார். நம்பியாரூரன் பக்தி நெறி, நாம் வணங்கும் பரம்பொருளையே பரவைக்கு இரவில் திருத்தூது செல்லும் பணியாளாக்கியது. எம்பெருமானே நம்பியாரூரது இன்ப அன்பையும், தவப் பெருமையையும், தாம் ஆட்கொண்டமையையும்,

"சாருந் தவத்துச் சங்கிலிகேள்! சால என்பால்
அன்புடையான்;
மேரு மலையின் மேம்பட்ட தவத்தான்;
வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யானாள உரியான்"

எனச் சங்கிலிக்கு எடுத்துக் கூறு முகத்தால் நாமும் நாளும் நம்பியாரூரனைத் தொழுதுய்ய நல்வழி காட்டியுள்ளார்.

சிவனையன்றி எவரையுஞ் சிந்தியாத உபமன்னிய முனிவர் திருக்கயிலாயமலையடி வாரத்தில் மாதவர் மத்தியில் வீற்றிருந்தார். ஒளிமயமான கயிலாயத்தில், ஆயிரஞ் சூரியர் சேர்ந்தாற் போன்றபேரொளி யொன்று பிரகாசமாயிற்று. தபோதனர் இதுயாதென அதிசயித்தனர். சிவசிந்தனையுள்ள உபமன்னிய முனிவர் உண்மையை உணர்ந்தார். சிவன் ஆணையால் தென் திசையில் அவதரித்த நம்பியாரூரர் மீண்டுங் கயிலைக்கு எழுந்தருளுகின்றார் என்று சொன்னார். சொல்லி உச்சிக் கூப்பிய கையினராய் எழுந்து, ஒளிதோன்றிய தென் திசையை நோக்கி ஆனந்தத்தோடு சென்றார். அப்பொழுது முனிவர்கள்.

"சம்பு வின்னடித் தாமரைப் போதலால்
எம்பி ரானிறைஞ் சாயிஃ தென்"

எனத்

"தம்பி ரானைத் தன்னுள்ளந் தழீஇயவன்
நம்பி யாரூரன் நாம்தொழுந் தன்மையன்"

என்று விடை கூறினன். தன்னுள்ளத்திலே எம்பிரானை நீக்கமற முழுநிறைவாக வைத்திருக்கின்ற தன்மையினால் நம்பியாரூரனும் நம்மால் தொழப்படும் தன்மையுடையவன் என விளக்கஞ் செய்தார். பாசநீக்கத்தின் கண் உண்டாம் மெய்யுணர்வு நிலைத்தற்குச் சிவனடியாரை வழிபடவேண்டுமென்பது சாத்திரம். சிவஞானபோதமும்,

"மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்றுரைக்கின்றது. இவ்வழிபாடு, மலவாசனையைத் தடுத்து சிவானந்தத்தை வளர்க்கும் சாதனமாகும் மாதவச் சிவஞானயோகிகளும்,

"பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமாள் என்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வ மாமால்"

என (காஞ்சிப் புராணத்தில்) வாழ்த்தி வணங்கியுள்ளார். சிவவேடப் பொலிவு, சிவோகம்பாவனை, சிவதொண்டு, தன்மை என்பவற்றால் சிவமாக விளங்கியவர் நம்பியாரூரர். அவர் நாம் வழிபடுதற்கேற்ற பக்குவமுள்ளவர். சிவஞானசித்தியாரும்,

"ஆசையொடும் அரன்அடியார் அடியாரை
அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந்து அருள்ஞானக் குறியில்நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே"

என்று கூறியுள்ளது.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே"

என்பது அப்பர் அருள்மொழி.

இறைவனையே வாழ்வுப் பொருளாக வைத்து வாழ்ந்தவர் நம்பியாரூரர். அவர் நிலையற்ற உலகியற் பழக்கந்தவிர்த்து, நிலை பெற்ற திருவருளுடன் கூடிவாழும் பழக்கத்தைக் காட்டியவர். தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயத்தினைச் சாரவேண்டிய நாம், இன்று சமயநெறி தவறிவிட்டோம். "தாழ்வெனுந் தன்மைவிட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து வாழ்வதே" (7-8-7) உண்மை வாழ்வென மயங்கியுள்ளோம். எமது அவல நிலையைத் தன்நிலையாகக் கொண்டு 'ஊனைப் பெருக்கி உன்னை நினையா தொழிந்தேன் செடியேன் உணர்வில்லேன்" எனப்பாடி, எம்மைச்சிந்திக்கச் செய்துள்ளார். "ஊனைக் காவல் கைவிட்டுன்னை உகப்பார் உணர்வாரே" எனப்பாடி அருள்நெறிக்கு ஆற்றுப்படுத்தியுள்ளார் நம்பியாண்டார் நம்பியும் சுந்தரர் செந்தமிழ், மருள் தம்மையெல்லாம் நீக்கி அருளொளி காட்டி, வாரா உலகநெறி ஏற வழிகாட்டுவதாகக் கூறியுள்ளார்.

முடியாலுலகாண்ட மூவேந்தரும், நம்பியாரூரன் நற்றாள் பணிந்து நற்பதமுற்றனர். அவருள்ளும் சேரமான் பெருமாள், தனது பரமாசாரியராகக் கருதிப் பாதபூசை செய்து சிலம்பொலிகேட்டு ஆகாய கமனஞ்செய்து கைலையை அடைந்தார். பெருமிழலைக்குறும்பர், சோமாசிமாற நாயனார் என்போர் நம்பியாரூரரை நண்ணிப், பாதந்தொழுது சிவலோகஞ் சேர்ந்தனர். சைவசமய பரமாசாரியரான நம்பியாரூரர் நாம் தொழுந்தன்மையரே 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்பது திருமந்திரம். 'சிவமேகுரு; 'குருவே சிவம்' என்று நாமும நம்பியாரூரர் பாதந் தொழுது கற்கதிபெறுவோமாக!

# சிவயோக சுவாமிகள் பிள்ளைத்தமிழ்

### தாலாட்டுதல்

ஐயன் செவ்வே ளுலாப்போதும் ஆழிமான்றே ரடியுறையும்
அன்னை நல்லூர்ச் செல்லப்பன் அறிவுத் தீம்பா லகடாரப்
பெய்யத் திருவாய் மடுத்துண்ட பிள்ளைப் பெருமாள்! கண்வளராய்
பெற்ற மூர்ந்த பிஞ்ஞகனைப் பேணி நாயேம் பிறவிபிழைத்
துய்யப் பிறந்த வருட்கடலே யுலகஞ் செய்த தவப்பேறே!
யூழி யூழி வாழ்கநின துடலம் வளரக் கண்வளராய்
மையற் படுத்து மிருள்சீக்கு மணியே தாலோ தாலேலோ
வளஞ்சேர் கொழும்புத் துறைபெற்ற வாழ்வே தாலோ தாலேலோ. (1)

முக்கனி யோடுப ருப்புச் சோற்றிடை முழுநெய் பெய்தூட்டி
மூடமு ழுக்கவு றைந்தந றுந்தயிர் மொந்தைக விழ்த்தருகிற்
றுய்க்கென வின்சொல ளித்துவி ருந்தைத் துய்ப்பித் தகமகிழுந்
தொல்லோர் மரபுத ழைத்தகொ ழும்புத் துறைவாழ் முனிவேந்தே!
மெய்க்கவி னுற்றிரு வினையறு பிள்ளைமை மேவிய பெரியோயே!
விண்ணவர் மண்ணவர் வேறுயிர் யாவையும் விழிதுயி லாததுயில்
தக்கதெ னக்களி பொங்கியு ணர்த்துக தாலோ தாலேலோ
சார்பறு திருவரு ளணைமிசை வளர்க தாலோ தாலேலோ. (2)

கண்டா ருளங்கவர் கள்வா தாலே தாலேலோ
கல்லாக் கவிஞர்மேங் கவிமணி! தாலோ தாலேலோ
கொண்டாடு மாதவர் கோவே தாலோ தாலேலோ
குன்றாத யோகமர் குன்றே தாலோ தாலேலோ
தண்டா நமன்வலி தகர்த்தோய் தாலோ தாலேலோ
தாழாக் காமனைச் சாய்த்தோய் தாலோ தாலேலோ
உண்டாடு தன்னையு முண்டோய் தாலோ தாலேலோ
உய்ந்தார்கொ ழும்பையி லுற்றாய் தாலே தாலேலோ. (3)

## கல்வி

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப் பொருள் செல்வப் பொருள் என இரண்டாம். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும் வித்தை யெனினும் பொருந்தும். கற்றற்குரிய நூல்களாவன அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந்நூல்களை அறிதற்குக் கருவிகளாகிய நிகண்டு இலக்கணம் கணக்கு முதலிய நூல்களுமாம். அறமெனினும் தருமமெனினும் பொருந்தும். வீடெனினும், முத்தியெனினும், மோட்சமெனினும் பொருந்தும்.

செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும்; கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப் பொருள் வெள்ளத்தாலாயினும் அக்கினியாலாயினும் அழியும்; கல்விப் பொருளோ ஒன்றாலும் அழிய மாட்டாது. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்து கொண்டே வரும்; கல்விப் பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே வரும். செல்வப்பொருள், சம்பாதித்தல் காப்பாற்றல் இழத்தல் என்னும் இவை

களாலே துன்பஞ்செய்து, பலரையும் பகையாக்கும். கல்விப்பொருளுடையவர், இம்மையிலே சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், பின்னே தருமத்தையும் முத்தியையும் அடைதலாலும், இடையறாத இன்பத்தை அநுபவிப்பர். இப்பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் அறிந்தோம் என்று உலகத்தார் பலரும் அவரிடத்து அன்புடையவராவர். ஆதலினாலே, செல்வப் பொருளினும் கல்விப் பொருளே சிறப்புடையது.

உயர்குலமும் அழகும் செல்வாக்கும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர். இராசாக்களுக்கு அவர் தேசத்தின் மாத்திரம் சிறப்புண்டாம். கற்றறிந்தவருக்கு அவர் சென்ற சென்ற தேசங்களினெல்லாம் சிறப்புண்டாம். ஆதலின் இராசாக்களினும் கற்றறிந்தவரே சிறப்புடையர். ஆதலினால், யாவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல்வேண்டும்.

அழுக்குப் படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும்; அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கமாட்டாது. சிறுபிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். புத்தி சமுசாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்துகொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்றாலும், கல்வி நன்றாகப் புத்தியிலே பதிய மாட்டாது. ஆதலினாலன்றோ ஔவையார் "**இளமையிற் கல்**" என்று அருளிச் செய்தார்.

கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். வியாதி வறுமைகள் இல்லாமையும், பொருள் இளமை முதலியவைகள் உண்மையும், கல்வி கற்றற்குச் சிறந்த கருவிகள். மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே அருள் உண்டாகும்படி நடத்தல். ஆதலினாலே, கல்வி கற்கும் மாணாக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும் வழிபாடாவது, இன்சொற் சொல்லல், வணங்குதல், உற்றவிடத்து உதவுதல் முதலாயின.

கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும், மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், எப்பொழுதும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்பக் கல்வியிலே பயிலல் வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர் தாம அதிக சமர்த்தர் என்று நினைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல்போல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினால், கல்வியைச் சிறிது கற்ற மாத்திரத்தால் அமையாது மேன்மேலும் கற்றல் வேண்டும்.

தாங்கேட்ட பாடங்களை நாடோறும் போற்றலும், தாங்கேட்ட பொருள்களைப் பலதரமுஞ் சிந்தித்தலும் ஆசிரியரை அடுத்து அவைகளைக் குறைதீரக் கேட்டலும், ஒரு சாலை மாணாக்கர் பலருடனும் பலதரமும் பழகுதலும், தாம் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினவுதலும், அவர் வினவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும், தாம் கேட்டறிந்ததைப் பிறருக்கு அறிவித்தலும், ஆகிய இவைகளெல்லாம் கல்வி பயிலும் மாணாக்கருக்குக் கடன்களாம்.

நூல்களிலே சிலநாட் பழகினால், விவேகிகளாயினும், சிலவற்றில் வல்லராதலும் அரிது. பலநாட் பழகினால், மந்தர்களாயினும், பலவற்றிலும், வல்லவராவர். நூற்பொருளை விரைவினாலே பார்த்தால், விவேகிகளாயினும், ஒன்றுந்தெரியாது. விரையாது அமைவுடனே பார்த்தால், மந்தர்களாயினும, கருகாது தெரியும்.

பெரும்பாலும் எல்லாருக்கும் கற்பதிற் கருத்திறங்கும், கற்றதிற் கருத்து இறங்காது. அது நன்மையன்று. கருத்தைக் கற்பதிலே மட்டுப்படுத்தி, கற்றதிலே சிந்தாமல் இறக்கல் வேண்டும். வருந்திக்கற்ற நூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல் கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு, வேறுபொருளை அரிப்பரித்துத் தேடல் போலும். பசி முதலிய வருத்தத்தாலாவது, அன்ன முதலியவற்றின் கண் அவாவினாலாவது, யாதாயினும் வேறொரு நிமித்தத்தாலாவது, கருத்து மயங்கினால், அப்பொழுது கல்வியிற் பழகுதலொழிந்து, அம்மயக்கந் தீர்ந்த பின்பு பழகல் வேண்டும்.

கல்வியுடையவர் தாங் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன்மாணாக்கர்களுக்

# சும்மா இருக்கச் சூத்திரம்

எம்மால திவதற எம்பெருமான்
யாது மின்றி
சும்மா இருக்க ஒரு சூத்திரம்
தானில்லையோ?

## 2. ஒருமொழி

ஓமெனு மோங்காரத்துள்ளே யொரு மொழி (1)

மூர்த்தி தலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே. (2)

சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியாம் உத்தமர்க்குத்
தம்மாய் வார்க்கு ஓருரையே சஞ் சீவ மென்மேலு
மாற்றஞ் சகுளப்புள் வாக்கு மது வுண்ட
போற் றும்பியின் பாட்டுப்போல். (3)

தித்திக்கும் ஒரு மொழியால் எங்கள் குருநாதன்
சின்மயத்தைக்காண வைத்தான் எங்கள் குருநாதன்
சும்மா விருந்தா லென்றான் எங்கள் குருநாதன்
சுகம் பெறலாம் என்றான் எங்கள் குருநாதன் (4)

ஒரு மொழியாலே யுணர்தற்கு வைத்தான்
சும்மா விரு (5)

ஒரு மொழியாலே சுருதியாகம நூலுயர்
புராணமு மெலா மொழியும்
ஒரு மொழியாலே சரிதை நற்கிரியா யோக
பாவனை யெலா மொழியும்
ஒரு மொழியாலே யண்ட பூதங்க ளொடுங்
கிடும் தன்னிலை தோன்றும்
ஒரு மொழி சும்மா இருத்தலாம் அதனால்
ஒப்பிலாச் சிவபதம டைவார். 6)

சரியையின் தொழிலினு லுஞ்
சற்கிரியை யினும் யோகம்
புரிதரு முயற்சி யானும் பொருந்
தொணு தென்பர் மேலோர்
உரிய தேசிக னுரைக்கும் ஒரு மொழி
உண்மை யாலே
அரிய மெய்ஞ்ஞான வீடிங் கடைவது
திண்ணமாமே (7)

ஒரு மொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலமொழிக்கு மொழிக்கும்
எனமொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றை மொழியெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும்
கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்
கண்டனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை உன்னை விட்டு நீங்காத்
தற்பரமாயா னந்தப் பொற்பொதுவாய் நில்லே (8)

அற்ப மனமே அகிலவாழ் வத்தனையுஞ்
சொற்பனங் கண்டாய் உண்மை சொன்னேன்-
கற்பனையொன்
றில்லா விடத்தே யெனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய் நீதான் ஓர் கவி. (9)

உடல்பொய் யுறவாயின் உண்மையுற வாகக்
கடவாரார் தண்ணருளே கண்டாய் — திடமுடனே
உற்றுப்பார் மோன னொருசொல்லே யுண்மைநன்றாய்
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ் (10)

இகமுழுதும் பொய்யெனவே யேய்ந்துணர்ந்தால்
ஆங்கே
மிகவளர வந்தவருண் மெய்யே—அகநெகிழப்
பாரீர் ஒருசொற் படியே யனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம். (11)

தானந் தவஞானஞ் சாற்றரிய சித்திமுத்தி
ஆனவை யெல்லாந் தாமேயாகுமே—மோனகுரு
சொன்னவொரு சொல்லாற் சுகமா யிருமனமே
இன்ன மயக்கமுனக் கேன் (12)

உன்னை உடலை உறுபொருளைத் தானவே
என்னை யடிமைக் கிருத்தினன்—சொன்னவொரு
சொல்லை மறவாமற் றோய்ந்தானெஞ் சேஉன்றல்
இல்லை பிறப்பதெனக் கே (13)

ஐயா அருணகிரி யப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர்யார் - வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னனையாய்
முக்கணெந்தை
நாற்றிசைக்குங் கைகாட் டினன். (14)

*(1) திருமந்திரம் 2627. (2) தாயுமானவர் 791 (3. ஒழிவில் ஒடுக்கம் 1, 3. (4)-(5. குருநாதன். (6 -(7. நிஷ்ட அநுபூதி 2,3 (8)—(14) தாயுமானவர். 186 472, 460, 469, 529, 530, 485.*

---

குக் கல்வி கற்பித்தலும், எல்லாருக்கும் உறுதி யைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வியா லாகிய பயனை அடைந்தவராவர். இம்மூன்று மில்லாவிடத்துக் கல்வியினாற் பயனில்லை.

சரீரசுகத்துக்கு ஏதுவாகிய அன்னவஸ் திர முதலியவற்றையும் ஆன்மசுகத்துக்கு ஏது வாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையே யாதலின், எல்லாத் தானங்களினும் வித்தியா தானமே சிறந்தது. ஒருவருக்கு அன்னவஸ் திரங்கொடுத்தால், அவை அவருக்கு மாத் திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிது பொழுது மாத்திரமே ஒரு விளக்கேற்றுதல், அவ்வொரு விளக்கிலே பல விளக்கும், அப் பலவிளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக, எண்ணில்லாத விளக்கு ஏற்றப்படுதற்கு ஏதுவாதல்போல, ஒருவருக் குக் கல்வி கற்பித்தல், அவ்வொருவரிடத்திலே பலரும், அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத் திலே பற்பலருமாக, எண்ணில்லாதவர் கல்வி கற்றுக்கொள்ளுதற்கு, ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். ஆதலின் வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை தாங்கற்ற கல் வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சுமாமரமாவர்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

## திருத்தில்லையில் அருளியவை

(பொது)

வேதத்தின் உள்பொருள் மண்ஆசை
மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை
யோசெய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே
வெளிச்சமது ஆம்பொழுது
காதுஅற்ற ஊசியும் வாராது
காணும் கடைவழிக்கே (11)

மனையாளும் மக்களும் வாழ்வும்
தனமும்தன் வாயில்மட்டே
இனமான சுற்றம் மயானமட்
டேவழிக்கு ஏதுதுணை
தினையாம் அளவுஎள் அளவுஆ
கிலும்முன்பு செய்ததவம்
தனைஆள என்றும் பரலோகம்
சித்திக்கும் சத்தியமே. (12)

அத்தமும் வாழ்வும் அகத்துமட்
டேவிழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்
டேவிம்மி விம்மிஇரு
கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்
தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப்
புண்ணிய பாவமுமே. (13)

சீயும் குருதிச் செழுநீர்
வழும்பும் செறிந்துஎழுந்து
பாயும் புடைவைஒன் றில்லாத
போது பகல்இரவாய்
ஈயும் எறும்பும் புகுகின்ற
யோனிக்கு இரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல்
வைக்க மருந்துஇல்லையே. (14)

சீதப் பனிக்குஉண்டு சிக்குஎனக்
கந்தை தினம்பசித்தால்
நீதுய்க்கச் சோறு மனைதோறும்
உண்டு நினைவுஎழுந்தால்
வீதிக்குள் நல்ல விலைமாதர்
உண்டுஇந்த மேதினியில்
ஏதுக்கு நீசலித் தாய்மனமே
என்றும் புண்படவே (15)

ஆறுஉண்டு தோப்புஉண்டு அணிவீதி
அம்பலம் தானும்உண்டு
நீறுஉண்டு கந்தை நெடுங்கோ
வணம்உண்டு நித்தம்நித்தம்
மாறுண்டு உலாவி மயங்குநெஞ்
சேமனை தோறும்சென்று
சோறுஉண்டு தூங்கிப்பின் சும்மா
இருக்கச் சுகமும்உண்டே (16)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று
வெய்யில் ஒடுங்கிவந்தால்
தடுக்கப் பழைய ஒருவேட்டி
உண்டு சகம்முழுதும்
படுக்கப் புறத்திண்ணை எங்குஎங்கும்
உண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவன்உண்டு நெஞ்சே
நமக்குக் குறைவில்லையே. (17)

மாடுஉண்டு கன்றுஉண்டு மக்கள்உண்டு
என்று மகிழ்வதுஎல்லாம்
கேடுஉண்டு எனும்படி கேட்டுவிட்
டோம்இனிக் கேள்மனமே
ஓடுஉண்டு கந்தையுண்டு உள்ளே
எழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுஉண்ட கண்டன் அடியார்
நமக்குத் துணையும்உண்டே. (18)

மாத்தா னவத்தையும் மாயா
புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்குஒரு நிட்டைஉண்
டோநித்தன் அன்புகொண்டு
வேர்த்தால் குளித்துப் பசித்தால்
புசித்து விழிதுயின்று
பார்த்தால் உலகத் தவர்போல்
இருப்பார்பற்று அற்றவரே. (19)

ஒன்றுஎன்று இருதெய்வம் உண்டுஎன்று
இருஉயர் செல்வம்எல்லாம்
அன்றுஎன்று இருபசித் தோர்முகம்
பார்நல் அறமும்நட்பும்
நன்றுஎன்று இருநடு நீங்காம
லேநமக்கு இட்டபடி
என்றுஎன்று இருமன மேஉனக்
கேஉப தேசம்இதே. (20)




# சிவதொண்டன்

1983 — ஆகஸ்ட் மீ

ருதிரோற்காரி ஸ்ரீ ஆடி - ஆவணி மீ


## ஞானமார்க்கம்

ஞானம் என்பதும், அறிவு என்பதும் பொருளால் ஒன்றுயினும், ஆன்றோராட்சி வகையால் அறிவு என்பது, கல்விகேள்வி களால் வரும் உணர்ச்சியுடன் உலகத்தோ டொப்ப நிற்றலைக் குறிப்பதாகும். இதனை,

"எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு"

என்னும் திருக்குறள் தெளிவியா நிற்கும். ஞானம் என்பது வீடுபயக்கும் உணர்வாகிய மெய்யுணர்ச்சியைக் குறித்தே வழங்கப்படும். அஃதாவது கல்வி கேள்விகளாலும் உலகியலனுபவத்தாலும் வரும் அறிவைத் துணைகொண்டு நிலை நிலையாமைகளையும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்து, காணப்படுவனவெல்லாம் அழிதன்மாலையன வாதலைக் கண்டு, பற்றற்று மெய்யுணர்ந்து, அவாவறுத்து வீடுபேறடையச் செய்தலாம். இதனை வள்ளுவர் துறவியலில் வைத்து,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என விளக்கியுள்ளார். இவையே அறிவுக்கும் ஞானத்துக்குமுள்ள வேறுபாடு.

ஞானமொன்றுமே நித்தியானந்தப் பெருவாழ்வாகிய வீடுபேற்றினை அளிக்கும். சரியை, கிரியை, யோகங்களோ எனின் அவை ஞானத்தை உதிப்பித்தற்கு ஏதுக்களேயன்றி நேரே வீடு பேற்றிற்கு ஏதுக்களாகா. இதனை,

உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான
மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர்
கயவ ரன்றே.

என்பதனாலறிக.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என உண்மைநெறி கூறும் ஆன்றோர் வாக்கியங்களான மெய்ந்நூல்களை ஓதியுணர்ந்து, புண்ணியம் பாவம், சுவர்க்கம் நரக முதலியவற்றை நூலறிவாற் கண்டு சிந்தித்துப் பாவத்தை நீக்கிப் புண்ணியத்தைச் செய்ய விரும்பிச் செய்துவருங்கால் அப்புண்ணியப் பலனை சுவர்க்காதி போகங்களும் பந்தத்துக்கேதுவாகலின் பொன் விலங்கு போலாமென வறிந்து அவற்றையும் உவர்த்து பாசரகிதமாய் நிலைமாருத தாய் என்றுமழியாப் பேரின்பப் பெருவாழ்வாகிய பரமுத்தி யாதென விசாரித்து,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என யாக்கை முதலிய யாவையும் தனித்தனி ஆராய்ந்து,யாவும் அழிதன் மாலைய வாதலையறிந்து,

"யாதனின் யாதனின் நீங்கியா னோதல்
அதனின் அதனின் இலன்"

என்றவாறு எல்லாப் பொருள்களிலும் உள்ளத்துறவு தோன்ற,

"அவாவென்ப வெல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

எனவும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

எனவும் வரும் ஞானவாக்கியங்களின் படி மற்றையபற்றுக்களை விட்டொழித்து முழுமுதற்கடவுளிடத்தே பற்றுமுற்றும் செலுத்தி உறைத்து நிற்கப்பெறும் நிலையே ஞானமெனப்படும்.

இறைவனாலும் ஞானிகளாலும் அருளப்பட்ட மெய்ந்நூல்களைக் குருமுகமாகச் சிரத்தையுடன் கேட்டலும், கேட்டபொருள்களை மறப்பெனும் பகைவன் வாரிக் கொளவிடாது மனத்திற பதியும்படி தனித்திருந்து சிந்தித்தலும், சிந்தித்தபின்னர் பொருளை ஐயந்திரிபின்றி கடாவிடைகளால் ஆராய்ச்சி செய்து தெளிதலும், இதன்பின்னர் பிற செயல்களையெலாம் விடுத்துத் தெளிந்த நிலையிலேயே மனத்தை நிறுத்தி நிட்டைகூடலும் என ஞானப்படிகள் நான்கு வகைப்படும்.

( தொடர்ச்சி 197-ம் பக்கம் பார்க்க )

The Sivathondan

*NATCHINTHANAI*

## What do we want?

*Refrain:* We want the grace of the Lord of *Nallur*!
We want to be always singing!
What else do we want?

We want to remain *summá*, oblivious of the word and meaning.
We want to take refuge in the holy *guru's* feet.
We want the grace.

We want to repeat day and night the name of *Siva*.
We want to destroy the three desires to their very roots.
We want to see and see and appease the mind,
We want to be rid of lust and anger and delusion.
We want the grace.

We want the mind to cease from following the senses' path.
We want to be blessed with full and perfect *nishdai*.
We want to have love towards all living beings.
We want to travel by the path of the glorious *sushumna*
We want the grace. [206]

---

A farmer sows good seed on his land, pulls out all the weeds growing among the plants, and finally garners the grain. In the same way, the *bhaktha* sows the seed of devotion in the field of God, roots out the weeds of lust, anger, desire, pride and envy, gathers in the grain of heavenly bliss, and lives in enjoyment of it.

In the flower-garden of the world, souls are the flowers that are blooming there, which God delights to behold.

A goldsmith fashions several ornaments out of gold. So God, the Great Goldsmith, makes many ornaments — different souls — out of the One Universal Spirit. [11]

---

# St. Sundaramurthi Nayanar and Swami

How can man tune himself to receive this fountain of Grace from Siva? Without Grace man will continue to wallow in material bondage, ignorance and desire. Without freeing himself from these strong cords of attachment, m-n cannot become a fit receptacle to receive the Grace of the Lord. Subject as man is to desire and fear, he needs the guidance of the *Guru*, who alone can make him *know* his own true self.

Swami reiterates the need to "Know Thyself by thyself". "*Let the camp light of the Guru be used to light your heart, and when you see yourself as others see you, and also see within you the light of God radiating its rays, then will you gradually begin to see the real Self in you.*"

This is the *Yoga marga* followed by *St. Sundarar*, who exemplified in his realisation, the relationship of a friend with God as his intimate friend

In consonance with the symphony of St. Sundaramoorthy, Swami taught a way of life that bestows discrimination, and *santham* - peace with understanding, the peace that strengthens, unifies and illumines our souls, while we are still engaged in pursuing our duties and obligations in the world. He dissuaded asceticism and flight to the forest, and the use of ochre garb to proclaim the inner renunciation! He shared the affinity of seeking God as a good companian with the bard of Tiruvarur.

Many songs in *Natchinthanai* echo St. Sundaramurthi Nayanar's breadth of of vision, and the beauty of perfect renunciation of a man of God to the supreme will of Parasivam. Swami stirred everyone to live in the world and realise God as his *Best Friend*, exactly as St. Sundarar did, calling upon Him to guide and shelter him at every crucial event in his life, and to share his joys and sorrows. He would teach the young boys and girls to sing the first Devaram of this loving bondsman, who called Siva a *madman*, in the same way as Chellappah Swami was called a madman. The love of God shines in this first hymn which unfolds one of St. Sundarar's crucial experience of divine grace.

"*O madman with the moon-crowned hair,*
*Thou lord who art the fount of grace,*
*How could I bear to forget?*
*My soul hath a place for Thee,*
*Venney-nallur, in 'Grace's shine,'*
*South of the stream of Pennai, there*
*My father, I became all thine;*
*How could I now myself forswear?*"

St. Sundarar VIII. 1. 1.

Swami would make some of the young aspirants who were drawn to the path of Yoga to sing the hymns of this great Saint during the evening hours at his Hermitage.

"*Ah Me! I have left the path of love and service pure!*
*Now know I well the meaning of my sickness and my pain.*
*I will arise and go and worship at Aarur;*
*What folly! how long can I remain apart from Thee?*
*My pearl, my diamond rare, Thou king of great Aarur.*"

St. Sundarar VIII. 51. 1.

St. Sundarar's most famous testament of Faith as expressed in "Eternal allegiance to Thee alone I owe-To none else" "மீளா அடிமை,"

St. Sundarar VII. 95. 1.

was another of Swami's favourite hymns, which he would sing frequenty and make his devotees join in the chorus.

Our Gurunathan would sometimes greet his devotees with the popular hymn of St. Sundarar on the magnificat of *Namasivaya*.

"மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே........"

*"Linked to naught else in life, my mind*
*thinks only of Thy Feet.*
*I'm born anew, from this time forth I pass*
*the way of birth no more.*
*In Kodumudi, Lord austere, where wise men*
*Thee with praises greet,*
*Even if I forget Thee, my tongue will utter*
*adoringly* **Namasivaya.**

The songster Thuraiappa would take up the refrain in his sweet voice, the song from *Natchinthanai* on the remembrance of Lord's Name:

"Sing ye in joyful strains Siva, Siva.
The felicity that generates from the word,
I cannot recount, except be immerced in it.
The source of knowledge is mine without learning.
The key of existence lies in the palm of my hand"

Natchinthanai p. 18.

Filled with the fervour of the Saiva Saints, Swami would often say 'You and I belong to the holy galaxy of the servitors of Siva.' Seeing a pious devotee in distress, he once exclaimed, 'Leave it at His Feet as did St. Sundarar,' and began to sing the Shakespearean Ode, "Fear no more the heat of the Sun" in order to dissociate the distress from the sufferer, in comradeship. He would consume by the flame of his Yogic gaze, the lack of faith and purity among the doubting votaries who sought his solace. He would adomonish them to quiten the mind :

"Your friend is within. Tap at the door and keep on tapping, till He opens it. Call on Him incessantly. Chant his Name and He will respond as He did to St. Sundarar."

## Introduction to Natchinthanai

*(Continued from page 171)*

But in addition to the three functions of creation, preservation and destruction, God, according to *Saiva Siddhanta*, performs two other divine actions, which may be said to be the expression of His Holy Grace. Why, besides the Perfect One, there should be the apparently imperfect many, why souls should be plunged in the darkness of chaos, is the mystery of mysteries, the unanswerable question. Taking this for granted, *Siddhanta* regards the whole of existence as an ever-continuing process of evolution from formless chaos into formless bliss, which is effected by the action of Divine Grace, or the *Sakti* of the Lord. This operates in two ways, by obscuring and by revealing. The first is called *Tirodhâna Sakti*, the second *Anugraha Sakti.*

By themselves the individual souls (or *jivas*) would be hopelessly and helplessly lost in the darkness of *ánava*. In order to help them to escape, the Lord, out of His infinite compassion, gives them bodies and faculties and all the external world to enjoy. This is what, in *Saiva Siddhanta*, is called *mäva*. In using their organs and faculties souls perform actions which give appropriate results. This is designated by the word *karma*, the literal sense of which is action. In this way souls gain experience, by means of which they are enabled

---

Come Thou, Oh Siva! Heed our call and
come
Thou wondrous One in manifold forms,
Oh pure One who doth the cosmic dance.
Stainless art Thou with Sakthi by thy side,
Illumined rock of the Vedic seers - Come,
Come unto us.

Natchinthanai P. 34.

★ **Learn to remain calm and patient** ★

## God Alone Is

*Mahatma Gandhi*

I implicitly believe in the truth of the saying that not a blade of grass moves but by His will......

I cannot account for the existence of evil by any rational method. To want to do so is to be co-equal with God. I am, therefore, humble enough to recognize evil as such. And I call God long-suffering and patient, precisely because He permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil, He is the author of it and yet untouched by it.

I know, too, that I shall never know God if I do not wrestle with and against evil even at the cost of life itself. I am fortified in the belief by my own humble and limited experience. The purer I try to become, the nearer I feel to be to God. How much more should I be when my faith is not a mere apology, as it is today, but has become as immovable as the Himalayas and as white and bright as the snows on their peaks? Meanwhile, I pray with Newman who sang from experience:

"Lead, Kindly Light, amid the encircling gloom,
Lead Thou me on;
The night is dark and I am far from home,
Lead Thou me on;
Keep Thou my feet, I do not ask to see
The distant scene; one step enough for me.

*God is the hardest task-master I have know on earth, and he tries you through and through.* And when you find that your faith is failing or your body is failing you, and you are sinking, He comes to your assistance somehow or other and proves to you that you must not lose your faith and that *He is always at your beck and call, but on His terms, not on your terms.*

*God is great and compassionate. He would not try His servants beyond endurance.*

As we go forward in our journey of life, we have always problems coming up for decision, and they are the hardest when the voice of Satan nearly approaches the voice of God. Only fullest trust (in God) and perfect purity and extreme humility can lead us to the right choice.

*(To be continued)*

---

gradually to evolve from darkness into light. At the same time, both *karma* and *mâyâ* hide from the soul the true nature of the Lord and its union with Him, by making it believe in an objective world that is outside and separate from Him. That is why they are called 'Impurities'. But unlike *ànava*, they are given to the soul expressly to help it to free itself from that 'innate taint' and therefore represent the action of the Lord's Grace or S*akti*. Yet, as they conceal the soul's true relation to Him, they are said to constitute His 'obscuring' or 'veiling' S*akti*. Thus everything, apart from *ânava*, is God's Grace. He is not other than His Grace and He is not other than souls; and yet souls are subject to *ânava*, while He is not.

But the *mâya* of *Siddhànta* is not the same as the *màya* of *Vedanta*. For *Vedanta* it is *mâyà* and for *Siddhânta* *ànava*, which constitutes the great obstacle to the realization of Truth. In *Siddhanta*, though it forms a part of the bondage from which the soul must strive to free itself in order to attain liberation, *màya* also has a positive aspect. It is an aid given by God to enable the soul to extricate itself from the enveloping obscurity of *ànava*, like a lamp which helps to illumine the darkness of the night before the rising of the sun.



★ **Dont live by lying in the courts** ★

## ஞானமார்க்கம்

(192-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை,

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தலென வீரிரண்டாம் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கண்
மேவாது தப்பினவர் மேலாய பந்தங்கட்
கிட்டியபுண் ணியநாத ராகி யின்ப
இனிதுநுகர்ந் தரனருளா லிந்தப் பார்மே
ஞட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவான
ஞானநிட்டை யடைந்தடைவர் நாதன் ருளே"

என்பதனுலறிக

அன்றியும், இந்திரியங்களையடக்கி ஞான மலர்களாகிய கொல்லாமை, பொறை, அருள், அறிவு, வாய்மை, அன்பு, தவம், புலனடக்கம் என்பவற்ருல் இறைவனை அருச்சித்து, இறைவனையும், சிவனடியாரையும், ஆலயங்களையும் பரம்பொருளாகக் கருதித் தியானஞ் செய்தல் சரியையில் ஞானம்; மனக்கோவிலில் பூசைக்குரிய உபகரணங்களை அமைத்து, இதய தாமரையில் இறைவனை எழுந்தருளச் செய்து வணங்குதல் கிரியையில் ஞானம்.

பற்பல சித்திகளையும் பெற்று நாதவழியே சென்று இறைவனுடன் பேதியாகாமல் நிற்கும் உண்மைநிலை எய்தலாகிய சமாதி யோகத்தில் ஞானம். பதி பசு பாசங்களின் உண்மை முழுதுந் தெளிந்து, தற்போத மிழந்து இறைவனருள் வழிப்பட்டு இறைவனது பேரானந்தப் பெருக்கில மிழ்ந்தி இரண்டறக்கலந்து தூங்காமல் தூங்குதல் ஞானத்தில் ஞானம் என நால்வகையாகவும் கூறுவர்.

வைகரி முதலிய வாக்கின் பகுதியனவாகிய வேதசாத்திர கலைஞானங்களும் அசைபயுமாகிய சொற்பிரபஞ்சங்களும், நிலமுதல் நாதமீருகிய பொருட் பிரபஞ்சங்களும் வாயிலாக நிகழ்வது ஏகதேசஞானமாம். இவ்விருவகைப் பிரபஞ்சங்களையும் பொருந்தி நிற்கும் உயிர் இவையனைத்தும் தன்கீழடங்கியுள்ளன வெனவறிந்து அவற்றினின்றும் நீங்கி, அப்பிரபஞ்சமாகிய பாச நீக்கத்தால் அநாதியே பாசத்தினீங்கியிருக்கின்ற முதல்வனும் தானும் ஒப்பாம் என்று முடிவுகட்டுதல் சிவசமவாதஞானமாம். தூலசூக்கும் காரணதேகங்களால் கட்டுண்டும், நூலுணர்வாலுணர்த்தவுணர்ந்தும், உணர்ந்த வற்றையும் மறந்து பின்னர் நினைந்து உணர்ந்தும் இவ்வாறுணர்வதாகிய பாசத் தடை, ஞானத்தால் இடையே நீங்கப் பெறுதலின் தான் ஆதிமுத்தனெனவும், முதல்வன பிறர் உணர்த்த உணர்தலின்றித் தானே முற்றுமுணர்ந்து அநாதியே பாசத்தடை நீங்கிய பேரறிவாளனுதலின் அவனை அநாதி முத்தனெனவும, ஆதலால் யான் இறைவனை யொப்பேனெனக் கருதியது மாபாதகமெனவும் இரங்கி, எக்காலத்தும் யான் இறைவனின் மீளாவடிமையே யாவேன் எனக் காணுதலே பதிஞான மெனப்படும்.

இனி ஞானத்தை அபரஞானம் பரஞானம் என இருவகைப்படுத்திக் கூறுவாருமுளர். இவற்றுள் மேற்கூறிய ஞானங்களெல்லாம் அடங்கும்.

அபரஞானமே கலைஞானம். இது உண்மை நூல்களை ஓதியுணர்தலாம். உணர்ந்தவாறே சரியை கிரியை யோக அநுட்டானங்களைப் பெறவேண்டும். கற்றபின் நிற்கவதற்குத்தக என ஒழுக்கத்திற் கருத்துச்செலுத்தாமல் தர்க்கவாதத்திற் செலுத்துவது வீண் செயலேயாம்.

'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

என்பது வள்ளுவர் வாக்கு. மெய்ந்நூல்களிற் கூறப்பட்ட உறுதிப் பொருள்களை ஓதியுணர்ந்து தெளிந்து அவ்வாறே அநுபவத்திற் கொண்டுவந்து பிறழாது ஒழுகுதலே பரஞானம். இந்தவொரு ஞானமே வீட்டின்பத்தைப் பயக்கும்.

மெய்ஞானிகள் செய்யுங்கர்மங்கள் அவரைப் பற்ரு, 'என்செயலாவதியாதொன்றுமில்லை' யெனவும், 'ஆட்டுவித்தாலா ரொருவர் ஆடாதாரே' எனவும் கருதி சங்கற்பமின்றி நடப்பதே ஞானிகள் தன்மை. உலகின் இகழ்புகழ் இரண்டையும் கருதாதவா.

"நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப்
பேயாஞ் சகப்பழித்தென் பேணுகிலென் — தோயார்
பெருமை சிறுமையில்லை பின்னுமுன்னு மில்லை
வரையற்று வேண்டியசெய் வார்"

என்பதையுங் காண்க. உறங்குபவன் கைப்பொருள் தானே நழுவுவதுபோல ஞானியை விட்டுக் கன்மம் நழுகிவிடும். நான் கன்மத்தை விட்டுவிட்டேன் என்பவன் ஞானியாகான்.

உ
சிவமயம்

# சிவதொண்டன் சபை வெளியீடுகள்

1. நற்சிந்தனை (3 வது புதிய பதிப்பு) 15-00
2. NATCHINTHANAI (English Edition with elaborate Introduction) 20-00
3. நற்சிந்தனை — முருகன் திருப்பாடற் றிரட்டு 1-00
4. நற்சிந்தனைக் கீர்த்தனைகள் சாதாரண பதிப்பு 12-50
   (சுர, தாளக் குறிப்புகளுடன்) நூலகப் பதிப்பு 15-00
5. விவேகானந்த சுவாமிகள் சொற்பொழிவின் சாரம் 2-00
6. கந்தபுராணம் — அடிமுடி தேடு படலம் (வசனம்) 2-00
7. சைவத் திருமுறைத் திரட்டு 20-00
   (பன்னிரு திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுத்த 826க்கும் அதிகமான திருப்பாடல்கள்; வரலாறு, அற்புதம், பயன் தொடர்பான 52 முழுத் திருப்பதிகங்கள்; பண் இராக அட்டவணை முதலியன கொண்ட 235க்கும் அதிகமான பக்கங்கள்)
   (தபாற் செலவு தனி)

சிவதொண்டன் — செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் வெளியீடு
ஆண்டுச் சந்தா: உள்நாடு ரூ. 30-00 வெளிநாடு $ 5-00

விண்ணப்பங்கள் கடிதங்கள், காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை முதலியன அனுப்பவேண்டிய பெயரும் விலாசமும்:

சிவதொண்டன் சபை
434, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் - ஸ்ரீலங்கா.






*Bilingual Monthly Register Newspaper. No. R. B. N. 7 / 82 / 1961.*

Sub No. ..........................

*Sri* S. Sivagurunathan,
411/1, KKS Road,
Jaffna.

விலாச மாற்றங்களை, பழைய மற்றும் புதிய விலாசங்களுடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டெழுதுக.

*If not delivered within 3 days, please return to:*
SIVATHONDAN SOCIETY LTD,
434, Kankesanturai Road,
JAFFNA—SRI LANKA.


1. Printer: *O. Srikhantha, 239, Navalar Road, Jaffna.*
2. Publisher: *S. Sivagurunathan, 411/1, K. K. S. Road, Jaffna.*
3. (a) Printed at: *Sri Sanmuganatha Press, 336—340, K. K. S. Road, Jaffna.*
   (b) Published for: *Sivathondan Society Ltd., 434, K. K. S. Road, Jaffna, Sri Lanka.*
4. Date of Publication: *1st August 1983.*
5. Editor: *S. Sivagurunathan, M. A., Dip-in-Ed., "Thiruvadi Nilal" 411/1, K. K. S. Road, Jaffna.*